02nd JUNE 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 33 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

ICC MEN'S T20 WORLD CUP WEST INDIES & USA 2024

ரீ20 பரிசு மழையுடன் உதயம்

முழு விபரபத்தினை 04ம் பக்கம் பார்க்க...

# பைடனின் யுத்த நிறுத்தத்தை ஏற்றால்

## அமைச்சரவையிலிருந்து விலகுவேன்

### இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

### நிரந்தர தீர்வே எமக்கு தேவை: ஹமாஸ்



(சிறப்பு செய்தியாளர் எம்.என். முஹம்மட்)


அமெரிக்கா அதிபர் முன்வைத்துள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டை இஸ்ரேல் ஏற்றால் தான் கெபினட்டிலிருந்து விலகுவதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஹமாஸ் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் எந்த ஒரு தீர்வும் நிரந்தர தீர்வை நோக்கியதாகவும் இஸ்ரேலிய படைகள் முழுமையாக காசாவில்

02ம் பக்கம்பார்க்க...

# நாளையும் கடும் மழை!

## சிவப்பு எச்சரிக்கை




தற்போதைய சீரற்ற காலநிலை நாளையும் தொடருமென்றும் கன மழை பெய்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் 3 ஜூன் 2024 திங்கட்கிழமை மதியம் 2:00 மணி வரை

02ம் பக்கம்பார்க்க...

# அஹமதாபாத் கைதானோர் விவகாரம்

- முஸ்லிம் லீக் வாலிப முன்னணி தாரக பாலசூரியவுடன் சந்திப்பு
- உரிய நடவடிக்கை எடுப்பதாக ராஜாங்க அமைச்சர் உறுதி



தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்களாகக் சந்தேகிக்கப்படும் 4 இலங்கையர்கள் தொடர்பாக

03ம் பக்கம்பார்க்க...

# கடும் மழை வெள்ளம் ஒன்பது பேர் பலி



நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் மழையால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த நிவாரண பிரிவு அறிவித்துள்ளது. வெள்ளம் மண்சரிவு காரணமாக இதுவரை ஒன்பது பேர் மரணித்துள்ளனர்.

இந் நிலை காரணமாக இரத்தினபுரி அலபத்த பகுதியில் பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக

03ம் பக்கம்பார்க்க...

# ஹஜ் பெருநாளை தீர்மானிக்கும் துல்ஹிஜ்ஜா தலைப்பிறை மாநாடு

எதிர்வரும் 2024 ஜூன் 7ஆம் திகதி துல்ஹிஜ்ஜா மாதத்திற்கான தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் மஃரிப் தொழுகையின் பின்னர்

03ம் பக்கம்பார்க்க...

# ஈரான் சர்வதேச மாநாட்டில் ஹக்கீம், குழுவினர் பங்கேற்பு



ஈரான் இஸ்லாமிய குடியரசின் தலைநகரான

02ம் பக்கம்பார்க்க...

# பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை!

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை வெள்ளம் மண்சரிவு காரணமாக நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் நாளை விடுமுறை வழங்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## பைடனின்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

இருந்து வெளியேறுவதை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்று ஹமாஸ் – ஜோ பைடனின் யுத்தம் நிறுத்த உடன்பாட்டிற்கு தங்களுடைய தெளிவான முன்வைப்பை வைத்துள்ளது.

இதேநேரம் ரஃபா நகரை சுற்றி வளைத்துள்ள இஸ்ரேலிய இராணுவம் தொடராக பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடாத்திவரும் நிலையில் அல்கஸ்ஸாம் படையணி பல இடங்களில் மும்முனை தாக்குதல்களை நடத்தியுள்ளது. குறிப்பாக பல இஸ்ரேலிய ராணுவத்தினர் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளதோடு, ஏராளமான இஸ்ரேலிய தாங்கிகள் அதேபோன்று இஸ்ரேலிய கவச வாகனங்கள் அழிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ரஃபாவிலிருந்து இஸ்ரேலை நோக்கி இடையிடையே ஏவுகணைகள் தொடராக ஏவப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த நிலைமைகளை பார்க்கின்ற பொழுது இந்த போராட்டம் மிக அண்மையில் முடிவதாக தெரியவில்லை. அத்துடன் ஹமாசின் மிக முக்கியமான தலைவர் யஹ்யா சின்வார் அவர்கள் நாங்கள் ஒருபோதும் அடிபணிய மாட்டோம் நாங்கள் தொடர்ந்து போராடுவோம் என்று உறுதிப்பட கூறியுள்ளார்.

அல் கஸ்ஸாம் படையணியின் உத்தியாகபூர்வ பேச்சாளர் அல் உபைதா தொடராக வெளியிட்டு வருகின்ற கருத்துக்களை பார்க்கின்ற போது இஸ்ரேலிய ராணுவம் ராணுவ ரீதியாக பலத்த தோல்விகளை சந்தித்து வருவது மிகத்தெளிவாக விளங்குகிறது. ஆனாலும் இஸ்ரேல் அந்த தோல்விகளை மறைப்பதற்காக ஆளில்லா விமானங்கள் கொண்டும் ஹெலிகள் மூலமும் விமானங்கள் மூலமும் தொடராக பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவது தெளிவாகியுள்ளது இன்று அதிகாலை இஸ்ரேலிய ராணுவம் முற்றாக வெளியேறிய ஜபாலியா நகரில் நூற்றுக்கணக்கான சடலங்களை அங்கு மீட்பு பணியில் ஈடுபட்ட ஹமாசினுடைய ராணுவ பிரிவு கண்டுபிடித்துள்ளதை அடுத்து அந்த இடம் ஒரு அனர்த்தப் பகுதியாக காசாவினுடைய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

ஒரு பக்கம் ஹிஸ்புல்லாக்கள் என்றும் இல்லாதவாறு பயங்கரமான தாக்குதல்களை நடத்தி வருகின்றது கடந்த 48 மணி நேரத்தில் ஹிஸ்புல்லாக்கல் 250க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை மேல்கலீலி மீதும், ஜேஜ் ஷர்மா போன்ற நகர்கள் மீதும் தொடராக நடத்தி வருகின்றது. மிகவும் சக்தி வாய்ந்த இஸ்ரேலிய ஆளில்லா விமானம்மொன்றை சுட்டு வீழ்த்தியுள்ள ஹிஸ்புல்லா இராணுவம் வட இஸ்ரேலில் உள்ள ஓர் இஸ்ரேலிய ராணுவ முகாமினை முற்றாக தாக்கி அழித்ததை அடுத்து இஸ்ரேல் தென் லெபனான் மீது தொடராக தாக்குதலை நடத்தி வருகின்றது. ஹிஸ்புல்லாக்களுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான முழு அளவிலான போர் நிறுத்தவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தங்களுடைய நிலத்தை பலாத்காரமாக பிடித்து வைத்துள்ள இஸ்ரேல் உடனடியாக அந்தப் பிரதேசங்களில் இருந்து வெளியேற வேண்டும் என்று லெபனானிய அரசு வேண்டிவருகின்றது.

ஒரு பக்கம் ஈராக்கில் உள்ள போராளிகளும் அதேபோன்று யமனில் உள்ள ஹுத்திக்களும் தொடராக அமெரிக்க இஸ்ரேலிய இலக்குகள் மீது தாக்குதல் நடத்துகின்றன. ஈராக்கில் உள்ள போராளிகளும் யமனிகளும் எலைட் நகரின் மீது தொடர்ச்சியான தாக்குதல் நடத்தி வருகின்ற போது அமெரிக்காவினுடைய விமானம் தாங்கிக் கப்பலுக்கு ஹுத்திகளுடைய தொடரான பலஸ்டிக் மிஸல் (எறிகணை ஏவுகணை ) தாக்குதல் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக களத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும் அமெரிக்கா அது தொடர்பான தகவல்களை தொடர்ந்து மறைத்து வருகின்றது. இந்த நிலைமைகளை பார்க்கின்ற போது மிக சிக்கலான இந்த போராட்டம் அண்மையில் ஓய்வடைவதற்கான எந்த சாத்தியங்களும் விளங்கவில்லை மேலும் மும்முரமாக போர் நடப்பதற்கும் லெபனான் இஸ்ரேல் இடையே அல்லது ஹிஸ்புல்லாக்கள் இஸ்ரேல் இடையே மிகவும் தொடரான சக்தி வாய்ந்த போராட்டங்கள், யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது இதே நேரம் துருக்கியினுடைய தலைவர் தையப் இர்துகான் தொடராக இஸ்ரேல் மீது அச்சுறுத்தி வருகின்ற நிலைமையை பார்க்கும் போது அவர் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் எந்த நேரமும் துருக்கி இந்த விவகாரத்தில் தலையிடுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகப்படுத்தி இருப்பதாக அரசியல் ஆய்வாளர்களும் ராணுவ ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றனர்.




## நாளையும்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*பலத்த மழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கையை விடுத்துள்ளது.*

*தற்போது நிலவும் மழையுடனான காலநிலை தீவின் தென்மேற்கு பகுதியில் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.*

*மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான கடும் மழை பெய்யக்கூடும்.*

*இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

## ஈரான்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*டெஹ்ரானில் நடைபெறும் ஈரானிய இஸ்லாமிய குடியரசின் ஸ்தாபகர் இமாம் கொமைனியின் 35 வது நினைவு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற சர்வதேச மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹகீம் டெஹ்ரான் சென்றுள்ளார்.*

*இம்மாநாட்டில் அவருடன் முஸ்லிம் கவுன்ஸில் ஸ்ரீலங்காவின் செயலாளர் ரிஸ்வி மற்றும் முஸ்லிம் கவுன்சிலின் செயற்குழு உறுப்பினர் டெஸி ஸஹ்ரான் ஆகியோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதேநேரம் இமாம் ஆயதுல்லா கொமைனியின் 35 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள ஈரான் இஸ்லாமிய கலாச்சார நிலையம் ஏற்பாடு செய்துள்ள நினைவுதின நிகழ்வு எதிர்வரும் 4ம் திகதி மாலை இஸ்லாமிய கலாச்சார நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு மேலதிகமாக அண்மையில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உட்பட முக்கியஸ்தர்கள் நினைவு தினமும் நடைபெறவுள்ளது.*



## அஹமதாபாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வெளி விவகார இராஜாங்க அமைச்சர் கலாநிதி தாரக பாலசூரிய தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்களாகக் கருதப்படும் 4 இலங்கை பிரஜைகள் அன்மையில் அகமதாபாத்தில் கைது செய்யப்பட்டதன் பின்விளைவுகள் குறித்து ஆலோசிப்பதற்காக அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் பிரதிநிதிகள் குழு அன்மையில் வெளி விவகார இராஜாங்க அமைச்சர் கலாநிதி தாரக பாலசூரியவை சந்தித்தது கலந்துரையாடியது.

இந்தியாவில் இடம்பெற்றுவரும் தேர்தல் பிரச்சாரங்களுக்கு மத்தியில் குழப்பமான கூற்றுகளை அடுத்து இந்த பிரச்சினை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது மற்றும் அரசாங்கத்திடம் இருந்து கவனம் தேவை என்பதை இது குறிக்கிறது

தூதரக விவகாரங்களுக்கான 1963 வியன்னா உடன்படிக்கையின்படி, கைதிகளுக்கு தூதரக அணுகலின் முக்கியத்துவத்தையும் சட்டப் பிரதிநிதித்துவத்தை எளிதாக்குவதையும் தூதுக்குழு எடுத்துரைத்தது.

கைதிகளின் உரிமைகளுக்காகவும், பின்னணியை கண்டறிவதற்காகவும், இந்த விவகாரத்தில் முறையான விசாரணையை உறுதிசெய்யும் போது, முறையான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவும் பிரதிநிதிகள் குழு வாதிடுவதாக இது அறிவுறுத்துகிறது.

அகமதாபாத் பிரச்சினையின் தாக்கம் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத்துறையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஐ. எஸ். ஐ. எஸ் எச்சரிக்கைகள் மற்றும் நியாயமான விசாரணை இல்லாததால் தவறான சமிக்ஞைகள் குற்றம் சாட்டல்கள் போன்ற விடயங்களில் வர்த்தக சமூகம்மிகவும் அக்கறை கொண்டுள்ளது.

இந்த பிரச்சினை நாட்டின் நிதி மற்றும் சுற்றுலாத் துறைகளில் சாத்தியமான விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதை இது குறிக்கிறது, அவை அதன் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு முக்கியமானவை.

நெறிமுறைகளைப் பின்பற்றி தூதரக விவகாரங்கள் முழுமையாக பரிசீலிக்கப்படும் என்று கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது.

தூதுக்குழுவால் மூன்வைக்கப்பப்பட்ட கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதில் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது மற்றும் தூதரகப் பிரச்சினைகளைக் கையாள்வதில் உறுவாக்கப்பட்ட நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும் என்பதை இது குறிக்கிறது

இந்த கலந்துரையாடலில் அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அரசாங்கம் இந்தப் பிரச்சினையை தீவிரமாக எடுத்துக்கொள்வதாகவும், விரிவான மற்றும் பயனுள்ள பதிலை உறுதிசெய்ய உயர்மட்ட அதிகாரிகளை ஈடுபடுத்துவதாகவும் இது அறிவுறுத்துகிறது.

இந்த சந்திப்பு 2024 மே 31 வெள்ளிக்கிழமையன்று அமைச்சகத்தில் நடந்தது.

இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் தலைவர் ஷாம் நவாஸ் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் இக் குழுவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது

## நீரில் மூழ்கியுள்ள வரகாபொல



(எம்.வஸீரா)

தற்போது நிலவும் .சீரற்ற காலநிலை காரணமாக வரகாபொலை பிரதேசம் வழமைக்கு மாறக பாதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய. ஹஸன்புர, மஸ்ஜித் மாவத்த பகுதிகளில் ஆறு பெருக்கெடுத்துள்ளது.

ஹஸன்புர நகரில் முற்றாக பாதைகள் நீரினால் மூடப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து கொழும்பு பிரதான வீதி வரகாபொல பிரதேசத்தில் இருந்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

தங்கோவிட பிரதேசத்தில் மரமொன்று முறிந்து வீழ்ந்தமையினால். வீதி தடைப்பட்டுள்ளது.

வரகாபொலை பஸ் தரிப்பிடங்களும் நீரினால், மூழ்கியுள்ளது.

## ஹஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறைக்குழுவின் தலைவர் ஹிஷாம் பத்தாஹி தலைமையில் நடைபெறவுள்ளது.

இத் தினத்தில் சூரியன் மாலை 1824 மணிக்கு மறைகின்றது இதேவேளை சந்திரன் மாலை 1921 மணிக்கு மறைகின்றது.

சூரியன் மறைந்து சந்திரன் அடிவானத்தில் தென்படக்கூடிய கால எல்லை 57 நிமிடங்களாகும். இந்த கால எல்லைக்குள் தலைப்பிறை காண்பது மிகவும் இலகுவானது. ஆனபோதிலும் தென்மேல் பருவப்பெயர்ச்சியின் காரணமாக சீரற்ற காலநிலை நிலவுகின்றது. குறிப்பாக நாட்டின் தென்மேற்குப் பிராந்தியங்களில் மேலே குறிப்பிட்ட கால எல்லைக்குள் தலைப்பிறை தென் படக்கூடிய சாத்தியம் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் தலைப்பிறை தென்படக்கூடிய சாத்தியம் அதிகளவில் காணப்படுகின்றது. இவ்வாறு 7 ஆம் திகதி தலைப்பிறை தென்படும் பட்சத்தில் 2024.06.17 ம் திகதி ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடக்கூடியதாக இருக்கும்.

ஆனபடியினால் இலங்கையில் வாழும் முஸ்லிம் பொதுமக்கள் 2024 ஜூன் 7ஆம் திகதி பிறை பார்க்கும் ஸ்தலங்களில் உள்ள உலமாக்கள் மற்றும் பிறைக்குழு உறுப்பினர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வீண் பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

பிறை சம்பந்தமான எந்த விடயங்களாயினும் கொழும்பு பெரிய பள்ளிவாசலுடன் தொடர்பு கொண்டு உங்களது ஐயப்பாடுகளை தீர்த்துக் கொள்ளுமாறும் பணிவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என சிரேஸ்ட வானிலை அதிகாரியும், பிறைக்குழு உறுப்பினருமான கலாநிதி மொஹமட் சாலிஹீன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கடும் மழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இரத்தினபுரி அயகம தும்பர பிரதேசத்தில் மண் மேடு சரிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இரத்தினபுரி கிரியெல்ல பிரதேசத்தில் மரம் முறிந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அடுத்த 48 மணித்தியாலங்களில் புலத்சிங்கல, மதுராவல, பாலிந்த கண்டி ஆகிய ஆறுகளை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்த தாழ்நிலப் பகுதிகளில் பாரிய வெள்ள நிலைமை ஏற்படும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன் காரணமாக குறித்த பிரதேசங்களில் வசிக்கும் மக்களும், அவ்வழியாக செல்லும் சாரதிகளும் மிகவும் அவதானமாக இருக்குமாறு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளுக்காக 3 ஹெலிகொப்டர்கள் தயார்படுத்தப்பட்டுள்ளதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் போது, கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கு அமைய மீட்புப் நடவடிக்கை எடுக்கப்படும் என விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடும் மழை காரணமாக மேல் மற்றும் தென் மாகாணங்களுக்கு ஐந்து கடற்படைக் குழுக்களும் 10 படகுகளும் அனுப்பப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும், அயகம, தெஹியோவிட்ட, கிரியெல்ல, மொரவக்க, தவலம மற்றும் திஹாகொட பிரதேசங்களில் தலா மூன்று படகுகள் அனுப்பப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார குறிப்பிட்டார்.

இதேவேளை, எட்டு நிவாரணப் படகுகளுடன் இராணுவத்தின் ஏழு நிவாரணக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவிக்கிறது.

கிரியெல்ல, தெஹியோவிட்ட, கலத்துரு ஓயா, மொரவக்க, திஹகொட, தவலம மற்றும் நெலுவ ஆகிய பகுதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 09 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், களனி ஆற்றின் நீர் மட்டம் களனிமுல்ல பிரதேசத்தில் வெள்ள மட்டத்தை எட்டியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்காரணமாக, அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JUNE 02 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மீண்டும் இன மோதலொன்றை தோற்றுவிக்க முயற்சியா?

அகமதாபாத் விமான நிலையத்தில் ISIS சந்தேக நபர்கள் எனக் கூறி கைது செய்யபட்ட இலங்கையின் முஸ்லிம் இளைஞர்கள் 4 பேருக்கும் மதத் தீவிரவாத தொடர்புகள் இல்லை என இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

அகமதாபாத்தில் கைதுக்குள்ளான இலங்கையர்கள் தொடர்பாக எவ்வித கேள்விபார்ப்பும் இன்றி ISIS பயங்கரவாத முத்திரை சூட்டப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. வழமையாக கடத்தல் வியாபாரங்களில் ஈடுபடும் இவர்களில் ஒருவர் 48 முறை இந்தியாவுக்கு சென்று வந்தவர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

48 முறை இந்தியா சென்று வந்தவருக்கு மீண்டும் விசா வழங்கியிருக்கும் போது திடீரென அவருக்கும் மற்றும் 3 பேருக்கும் ISIS குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது ஏன். இந்தியாவில் நடந்தது கொண்டிருக்கும் வாக்கெடுப்பில் ஆளும் தரப்பிற்கு முஸ்லிம் விரேதத்தை காட்டி வாக்குகளை திரட்டுவதற்காக திட்டமிட்டு கைது மேற்கோள்ளபட்டதா என்ற கேள்வி அரசியல் அரங்கில் எழுப்பப் பட்டுள்ளது.

இலங்கையில் விரைவில் நடைபெறவிருக்கும் தேர்தல்களை இலக்காக கொண்டே இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுகளும் எழுப்பப்பட்டன. அகமதாபாத் கைதினை இலங்கை ஊடகங்கள் குறிப்பிட்டுக் காட்ட முற்பட்டது. பாதுகாப்பு கல்லூரி விரிவுரையாளர் மீது அரசு நடவடிக்கை எடுத்ததன் மூலம் இந்த நாட்டு ஊடகங்கள் இதனை பெருப்பிப்பித்து முன்னெடுத்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மீண்டும் ISIS தலைதூக்கிவிட்டது என முஸ்லிம்களுக்கு எதிராக அபாண்டமான குற்றச்சாட்டுகளை ஊடகங்கள் கூற முற்பட்டன.

ஜனாதிபதி செயலகத்தின் ஊடக மையத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் சரத் பெரேரா முஸ்லிம்கள் மீது குற்றச்சாட்டுகளை எழுப்பினார். ஜனாதிபதி செயலகத்தின் ஊடக மையத்தை பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் இனங்களுக்கு இடையே நல்லெண்ணங்களை கட்டியெழுப்ப பாடுபடும் ஜனாதிபதியின் முயற்சிக்கு கூட களங்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்துள்ளார்கள்.

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் முஸ்லிம் சமூகத்தின் மீது இந்த சம்பவத்தைப் பயன்படுத்தி அபாண்டமான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர். இனவாதத்தை முஸ்லிம் சமூகம் முற்றாக நிராகரித்து வந்துள்ளது. மோசடி செயல்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எல்லா சமூகத்திலும்

இருக்கின்றார்கள். அகமதாபாத் சம்பவத்தின் முக்கி சூத்திரதாரி ஒஸ்மன்ட் புஷ்பராஜா என தெரிவித்த போலீசார் அவரை கைது செய்துள்ளனர்.

அதற்க்காக அவரைச் சார்ந்த சமூகத்தை குற்றம்சாட்ட முடியுமா. இந்த விடயத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் உண்மையிலே மோசடி செயல்பாடுகளில் ஈடுபடுகின்ற நால்வர் என்பது தெரியவந்தது.

அப்படியிருக்க அபாண்டமாக முஸ்லிம் சமூகத்தின் மீது இக்குற்றச்சாட்டை சுமத்த முற்படுவது ஏன். குறிப்பாக பெதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் சிலர் இதனை செய்துவருவது குறிப்பிடத்தக்கது. சமூகங்களுக்கு இடையே மீண்டும் ஒரு மோதலை ஏற்படுத்துவதற்காக எடுக்கின்ற முயற்சியாக இதனை காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கின்றது.




## "ரீ20 பரிசு மழையுடன் உதயம்"

**அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகியுள்ள ரீ20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளையொட்டி உதயத்தின் மாபெரும் பரிசுப் போட்டி.**

**இப் போட்டிக்கான கேள்விகளை எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எமது இணையதளம் மற்றும் பத்திரிகை ஊடாக அறிய முடியும்.**

**பெறுமதியான பரிசில்களைக் கொண்ட இப் போட்டியில் வயது வித்தியாசமின்றி அனைவரும் இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.**

***போட்டி விதிமுறைகள்:***

**- 10 கேள்விகள் வழங்கப்படும்.**

**- ஒவ்வொரு வினாக்களும் உதயம் இணையதளம், வட்ஸ்அப் குழுமங்களூடாக பிரசுரிக்கப்படும்.**

**- இரண்டு தினங்களுக்கு ஒருமுறை வினா பிரசுரிக்கப்படும். (மொத்தமாக வினாக்கள் முடிவடையும் திகதி 23.06.2024)**

**- பங்குபற்றும் போட்டியாளர்கள் 10 கேள்விகளையும் ஒன்றாக சேர்த்து A4 தாளில் கேள்விகளையும், விடைகளையும் எழுதி அதனை தெளிவாக Scan செய்து ஒரே தடவையில் கீழுள்ள வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

**- ஒரு போட்டியாளரின் விண்ணப்பம் ஒரு தடவை மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.**

**- போட்டியாளர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை விடையனுப்பும் அதே தாளில் எழுதியும், வட்சப் இல் டைப் செய்தும் அனுப்ப வேண்டும்.**

**- நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.**

**- விடை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: ஜூன் 25 - 27 ஆம் திகதிகளுக்கிடையில் அனுப்பி வைக்கவும்.**

**விடையனுப்ப வேண்டிய வட்ஸ்அப் இலக்கம்: 071 341 6350**

**மேலதிக விபரங்களுக்கு உதயம் விளையாட்டு செய்திப் பிரிவு: 077 87 51 032**



# MAYBE THEY WON'T நாவல் வெளியீடு

"MAYBE THEY WON'T" என்கின்ற ஆங்கில நாவல் எதிர்வரும் 28-06-2024 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் கொழும்பு BMICH தியூலிப் மண்டபத்தில் நடைபெற்றது.

சுயாதீன ஊடகவியலாளர் ஏ.ஆர். வி.லோஷன் பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முஸ்லீம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாறூக் ஆகியோர் கலந்து சிறப்பித்தாரகள்.

இந்நாவலுக்கான பிரதான மீளாய்வு உரையினை கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபர் சட்டத்தரணி றிஸ்வி மரைக்கார் அவர்களும் நூல் மதிப்பீட்டினை புத்தளம் வலயக் கல்விப்பணிமனையின் ஆங்கில ஆசிரிய ஆலோசகர் திருமதி பாத்திமா ரிஸ்கியா அவர்களும், ஊடகவியலார் அப்துல் ரஸ்ஸாக் உடையார் அவர்களும் நிகழ்த்தினர்.

பதின்மவயது இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் நிலவுகின்ற உறவுகள், அதனடியாக எழுகின்ற உணர்வலைகள், எண்ணங்கள், பார்வைகள், முரண்பாடுகள் அவற்றைப் பெற்றோரும் சமூகமும் அர்த்தப்படுத்தும் முறைமைகள் என இதுவரை பேசுபொருளாக அல்லாத ஆனால் நமது சமூகத்தில் உறைந்துகிடக்கின்ற ஒரு கருவை மையமாகக்கொண்டு புனையப்பட்ட



இந்த நாவலின் முதலாவது பதிப்பின் வெளியீடே அன்றையதினம் இடம்பெற்றது.

மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி மாணவனும், அண்மையில் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவருமான செல்வன் அப்துல்லாஹ் அஸ்மின் மேற்படி நாவலைப் புனைந்திருக்கின்றார்.

முன்னாள் விமானப்படை அதிகாரி முஹம்மது ஷிபா அவர்கள் தலைமையில் இடம்பெறவிருக்கின்ற இந்நிகழ்வில் எழுத்தாளர் செல்வன் அப்துல்லாஹ் அவர்களின் ஆசிரியர்கள், மற்றும் அவரது முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.




## உயர்தரம் கலைப்பிரிவில் ஹானிம் முதலிடம்



(ரஸீன் ரஸ்மின்)

இம்முறை வெளியான உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், புத்தளம் தெற்கு கல்வி வலயத்திற்குற்பட்ட கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி முஹம்மட் பஸ்லுல் பாரிஸ் ஹானிம் , புத்தளம் மாவட்டத்தில் கலைப்பிரிவில் (தமிழ் மொழி மூலம்) முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் அரசியல் விஞ்ஞானம் , பொருளியல் மற்றும் தகவல் , தொடர்பு தொழில்நுட்பம் ஆகிய மூன்று பாடங்களிலும் முறையே "ஏ" சித்தியைப் பெற்றுக் கொண்டதுடன், 2.1417 இஸட் புள்ளிகளையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கற்பிட்டி – அக்கரைப்பற்று பிரதேச வரலாற்றில் முதற் தடவையாக கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி இவ்வாறு மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றிருப்பது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

சிறுவயதிலிருந்தே ஒரு சட்டத்தரணியாக வரவேண்டும் என்பது தனது இலட்சியம் எனவும் அந்த இலட்சியத்தை நோக்கிப் பயணித்ததாகவும் கலைப்பிரிவில் புத்தளம் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி முஹம்மட் பஸ்லுல் பாரிஸ் ஹானிம் தெரிவித்தார்.

மேலும் , கல்வி கற்பதற்காக அடிக்கடி ஊக்கப்படுத்தி , மேலதிக வகுப்புகள் உட்பட கற்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்துகொடுத்த அன்புப் பெற்றோர்களுக்கும் கொத்தாந்தீவு மு.ம.வி அதிபர் உட்பட கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, வரலாற்றுச் சாதனை புரிந்து மாணவி முஹம்மட் பஸ்லுல் பாரிஸ் ஹானிம், கொந்தாந்தீவு கிராமத்திற்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார் என அந்த பாடசாலையின் அதிபர் கே.ரி.ஹாறூன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சாதனை படைத்த மாணவிக்கு பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் , பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவ – மாணவிகள் சங்கம், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், மற்றும் சமூக அமைப்புகள் பலரும் தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

மாணவி முஹம்மட் பஸ்லுல் பாரிஸ் ஹானிம், சமீரகம முஸ்லிம் வித்தியாலயத்தில் இஸ்லாம் பாட ஆசிரியராக பணியாற்றும் அஷ்ஷெய்க் எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி) மற்றும் கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ் மஹா வித்தியாலயத்தில் தமிழ் ஆசிரியையாக பணியாற்றி வரும் என். சித்தி நஸ்ரா ஆகியோரின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார் ரிஸ்லி முஸ்தபா





(எம்.எப். றிபாஸ்)

றிஸ்லி முஸ்தபா அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் அக்கட்சியின் தலைவர் முன்னிலையில் இணைந்து கொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொள்ளும் நிகழ்வு மாளிகைக்காடு பாவா றோயல் வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அயூப்கான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.எஸ். அமீர் அலி, திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்றூப், அம்பாறை மாவட்ட மக்கள் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட செயற்குழு தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.எம்.அப்துல் றஸாக் (ஜவாத்), முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாக எம்.ஐ.எம். மாஹிர், எம்.எஸ்.எம். சுபைர் உட்பட கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உயர் பீட உறுப்பினர்கள், உலமாக்கள், கல்விமான்கள், இளைஞர்கள் மாற்றும் றிஸ்லி முஸ்தபாவின் ஆதரவாளர்கள் என பலர் இதில் கலந்து கொண்டனர். இவர் முன்னாள் பிரதியமைச்சர் மயோன் முஸ்தபாவின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.








வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்களுடன் சிங்கப்பூர் தொழில் அதிபர் மற்றும் ரோயல் கிங்ஸ் நிறுவனர் சிராஜுதீன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தென்காசி மாவட்ட செயலாளர் சையது பட்டாணி, ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது, சிங்கப்பூர் ராயல் கிங்ஸ் மேலாளர் முஹம்மது ஹாரீஸ் ஆகியோர் சந்திப்பொன்றை மேற்கொண்டனர். இச் சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

# பேருவளை டீ.எம்.ஐ கல்வி நிறுவனத்தின் ஆங்கில டிப்ளோமா பாடநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




(பீ.எம்.முக்தார்)

பேருவளை டீ.எம்.ஐ கல்வி நிறுவனம் கடந்த 27 வருடகாலமாக உயர்தர கலை–வர்த்தக பிரவுக்கு அனுபவம் வாய்ந்த சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில் கற்பிக்கப்படுவதோடு, க.பொ.த சாதாரண தர வகுப்புகளும் உயர்தர மற்றும் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவ மாணவியருக்கான ஆங்கில டிப்ளோமா பாடநெறியும் நடைபெற்று வருகின்றது.இந் நிறுவனத்தில் 1997ம் ஆண்டிலிருந்து 2017 ம் ஆண்டு வரை பேராதெனிய பல்கலைக்கழகத்தின் வெளிவராத பட்டப் படிப்புக்கான பரீட்சைக்குத் தயார்படுத்தும் வகுப்புகளும் நடைபெற்று இதன் மூலம் இப்பிரதேச பாடசாலைகளின் பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு டீ.எம்.ஐ கல்வி நிறுவனத்தின் கடந்த 13 வருடங்களாக ஆங்கில டிப்ளோமா பாடநெறி உயர்தர பொது ஆங்கிலம், தரம் 10 மற்றும் சாதாரண தர ஆங்கில வகுப்புக்களை நடாத்தி வரும் ஹிஷாம் மகான் ஆசிரியரினால் சாதாரண தர மாணவ மாணவியருக்காக நடாத்தப்பட்ட ஆங்கில டிப்ளோமா பாடநெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அன்மையில் ஹிஷாம் மகான் ஆசிரியரின் தலைமையிலும் மேலும் டீ.எம்.ஐ. கல்வி நிறுவனத்தின் இயக்குநர் ரிஸ்வான் பாசி அவர்களின் வழிகாட்டலில் பேருவளை காலி வீதியில் அமைந்துள்ள தனியார் வரவேற்பு மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த 195 மாணவ மாணவியர் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியின் பிரதம அதிதியாக கொழும்பு பல்கலைக்கழக மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பத்மினி டி சில்வா அவர்களும், கௌரவ அதிதியாக எழுத்தாளரும் ஆங்கில ஆசிரியை, கேபுக்ஸ் (KBOOKS) இஸ்தாபகருமான திருமதி கான்சனா பிரியகான்த அவர்களும், விஷேட அதிதிகளாக ஆசிரியர் ஹிஷாம் மாகான் அவர்களின் முன்னாள் டிப்ளமோ மாணவர்களான டாக்டர் முஷப்பா முனாப், இளைஞர் பாரளுமன்ற பிரதி வெளிவிவகார அமைச்சர் அஹ்மத் ஸாதிக், முஷாபன் ஹனபி (பீ.ஏ) மற்றும் சான்றிதழ் பெற்றுக் கொண்ட மாணவ மாணவியர்களின் பெற்றோரும் கலந்து சிறப்பித்தனர்.









நாச்சியாதீவு பர்வீன்







# வகவத்தின் நூறாவது கவியரங்கும் -கவிதைத் தொகுப்பு வெளியீடும்-

வலம்புரி கவிதா வட்டம் தலைநகர் கொழும்பில் தலைமிர்ந்து இயங்கும் ஒரு இலக்கிய குழுவாகும். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாட்களில் கொழும்பில் எது நடக்குதோ இல்லையோ வகவ கவியரங்கம் இடம்பெற்றுவிடும். இந்த தொடரான, தொய்வடையா நிகழ்வுக்கு மிக முக்கிய காரணம் இலக்கியத்தை மிகவும் நேசிக்கின்ற ஒரு சுயநலமற்ற குழு இந்த பணியை செவ்வனே இணைந்து செய்து வருவதாகும் என்பதை மறுதலிக்க முடியாது.

வகவத்தின் செயற்குழு தலைவர் கவிமணி என்.நஜ்முல் ஹுசைன், அதன் செயலாளர் பன்முக எழுத்தாளர் இளநெஞ்சன் முர்சிதீன், வகவத்தின் பொருளாளர் கவிஞர் ஈழகணேஸ் ஆகியோரின் அர்ப்பணிப்பும், வகவத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான பிரபல எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர்கனி அவர்களின் பூரண வழிகாட்டலும், வகவ அபிமானிகள் நண்பர்களின் ஒத்துழைப்பும் இந்நிகழ்வுகள் தடையின்றி சிறப்புடன் தொடர்ந்து நடைபெற காரணமாகும்.

அந்தவகையில் வகவத்தின் நூறாவது கவயரங்கும்-வகவ கவிதைத் தொகுப்பு வெளியீடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (26) கொழும்பு-7 இல் அமைந்துள்ள ஜே.ஆர். ஜயவர்தன நிலையத்தில் வெகுவிமர்சையாக இடம்பெற்றது. தலைநகரத்தில் சீரற்ற காலநிலை நிலவிய போதிலும், தொடர் மழை போக்குவரத்துக்கு பாரிய சவாலாக இருந்த போதிலும் மண்டம் பார்வை யாளர்களால் நிரம்பியிருந்தது என்பது வகவம் அபிமானிகள் மத்தியில் ஆழமாய் CLWவியுள்ளதை கட்டியம் கூறியது.

நிகழ்வின் தலைமையை வகவத்தின் செயற்குழு தலைவர் என். நஜ்முல் ஹுசைன் ஏற்றிருந்தார். அவ்வாறே கவியரங்கின் தலைமையை தமிழ் தென்றல் அலி அக்பர் செவ்வனே செய்தார்.

சிறப்புப் பேச்சாளராக சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா மற்றும் அதிதிகளாக ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் திரு ஞானசேகரன், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவைக்கான பணிப்பாளர் திருமதி எம்.ஜே. றினூசியா, கெப்பிடல் டி.வி மற்றும் கெப்பிடல் எப்.எம் வானொலி ஆகியவற்றின் பிரதானி திரு சியாவுல் ஹக் ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வுகளை வகவ செயலாளர் இளநெஞ்சன் முர்சிதீன் அருமையாக தொகுத்தளித்தார்.

இந்நிகழ்வில், பெருந்தொகையான கவிஞர்கள், இலக்கிய நேசர்கள், வகவத்தின் அபிமானிகள், எழுத்தாளர்கள் என பலதரப்பட்டோர் கலந்துகொண்டு மண்டபத்தை நிறைத்திருந்தனர்.

வகவம் புதிய தலைமுறை இளம் கவிஞர்களுக்கு களம் அமைத்துக்கொடுத்து அவர்களை கவிதைத்துறையில் பட்டைதீட்டி, புடம்போடுகிறது.

வகவத்தின் கவியரங்கில் கவிதைபாட பெரிய கவிஞராகவோ அல்லது கவிதைத்துறையில் பிரபல்யமானவராகவோ அல்லது ஜனரஞ்சகமிக்க ஒருவராகவோ இருக்கவேண்டும் என்ற எந்த நிபந்தனைகளும்கிடையாது. அத்தோடு யாருடைய சிபாரிசும் தேவையில்லை மாறாக கவிதையை நேசிக்கின்ற எழுத்தாற்றல் உள்ள ஒரு கவிஞராக இருந்தாலே போதும் வகவம் செங்கம்பளம் விரித்து வரவேற்று களம் அமைத்துக்கொடுக்கின்ற அரும்பணியை செய்து வருகிறது.

நிகழ்காலத்தில் இளம் கவிஞர்கள் பலரை உருவாக்கி வழிப்படுத்தும் பணியை வகவக்குழு செய்து வருவது பாராட்டத்தக்கவிடயமாகும்.

கொட்டும் மழையிலும் மண்டபம் நிறைந்த பார்வையாளர்களை நோக்கும் போது வகவத்தின்மீதான பேரபிமானத்தின் வெளிப்பாடாகவே அதனை கொள்ள முடியும். வகவத்தின் தொடர்வெற்றியில் வகவ செயற்குழுபோலவே அதில் கலந்து சிறப்பிக்கின்ற கவிஞர்களின் ஒத்துழைப்பும் முக்கியமான விடயமாகும் என்பதை மறுதலிக்க முடியாது.

வகவக் குழுவும் அதன் செயற்பாடுகளும் விமர்சனத்திற்க்கு அப்பாற்பட்டவையல்ல ஆனால் வகவக்குழுவின் நேர்தியான செயற்பாடும், தொடரான இயக்கமும் அந்த விமர்சனங்ளை புறக்கணிக்க செய்துவிடுவதோடு வகவக்குழுவின் செயற்பாட்டை மனந்திறந்து பாராட்ட வைக்கிறது.

வகவத்தின் தலைவர் கவிமணி என்.நஜ்முல் ஹுசைன் உட்பட அக்குழுவினர், அனைவரையும் இணைத்து செயற்படும் பரந்த மனத்தை உடையவர்கள் என்பது நானறிந்த, நாடறிந்த உண்மையாகும் அவர்களோடு இணைந்து பயணிப்பதில் சங்கடமேதுமில்லை என்பதை கட்டியம் கூறியது வகவத்தின் நூறாவது கவியரங்கும் வகவ கவிஞர்களின் கவிதை நூல் வெளியீடும்.

வகவத்தின் இலக்கியப்பணி தொடரவும், அதன் உறுப்பினர்களின் காத்திரமான ஒத்துழைபினால் வகவம் இன்னுமின்னும் வளர்ச்சி பெற வும் என் இதயத்து வாழ்த்துகள்.

## ஓ! ஒரு பெண்ணாள்

ஓடீடும் பஸ்ஸுக்குள்ளே
ஓ..! ஒரு பெண்ணாள்
நின்றாள்
வாடிய முகமும் தோளில்
வளர்த்திய சேயுமாய்ச் சற்று
ஆடிய போதிலெல்லாம்
அடுத்தவர்க்கு அணைப்பேயாகி
ஓடீடும் பஸ்ஸுக்குள்ளே
ஓ..! ஒரு பெண்ணாள்
நின்றாள்

ஆசனத்தில் இருந்த அன்பர்
அடுத்திருந்தவரைப் பார்த்துப்
பேசினார் ‘உங்கள் இனப்
பெண்தானே எழுந்து சற்று
இடம் தன்னைக்
கொடுங்கள்’ என்றே
இரங்கினார்!
பஸ்ஸுக்குள்ளே
அடைபட்ட பெண்ணில் அவர்
அனுதாபம் பெருகி நின்றார்.!!

தாய்! ஒரு சேயினோடு
தவிப்பதில் பேதம் காணும்
நாயுனை என்ன என்பேன்
நாமெலாம் மனிதரல்லோ...?

- பாவலர் பஸீல் காரியப்பர் -

# பேருவளை இளங்கலை பட்டதாரிகள் அமைப்பினால் நடத்தப்பட்ட சிறப்பு வழிகாட்டல் நிகழ்ச்சி







(பீ.எம் முக்தார்)

இவ்வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்தரத்துறை வழிகாட்டல் நிகழ்ச்சி "Mission Intellect" என்ற தொனிப்பொருளில் கடந்த 26 ஆம் திகதி பேருவளை இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

பேருவளை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட பல மாணவ மாணவிகள் கலந்துகொண்ட இந்நிகழ்வு,அமைப்பின் தலைவர் சகோதரர் சாரிக் அவர்களின் தலைமையில், பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசியப் பாடசாலையில் நடைபெற்றது.

இச்சிறப்பு நிகழ்வின் வளவாலர்களாக, அமைப்பின் ஸ்தபாகரும் முன்னாள் தலைருமான இலங்கை இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹமத் ஸாதிக் மற்றும் இளங்கலை பட்டதாரிகளான அப்துல் பாசித் (தொழில்நுட்பம்), ஹலிஸ் கலீல் (அறிவியல்), மர்யம் அன்வர் ஹுசைன் (கலை), ரம்லா ரப்கான் (உயிரியல் விஞ்ஞானம்) அஸ்ரியா அமீன் (வணிகம்) மற்றும் ஹஷ்மத் ஹனபி ( தொழில் துறை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொழும்பு வெள்ளவத்தை ஐக்கிய இஸ்லாமிய சங்கத்தின் 34 வது வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(எம்.யூ.எம்.சனூன், எம்.எச்.எம்.சியாஜ்)

கொழும்பு 06 வெள்ளவத்தை ஐக்கிய இஸ்லாமிய சங்கத்தின் 34 வது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தின் போது, பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்:

போஷகர்கள்:

எம்.என்.எம்.அஸார், எஸ்.எம்.ஷாஸ்லி (அஹதிய்யா மத்திய சம்மேளன முன்னாள் பொதுச்செயலாளர்), எம்.எச்.எம்.நிஸாம்தீன் ஜே.பி., எம்.எஸ்.எம்.நியாஸ், ஏ.எம்.எம்.நஸீர்.

தலைவர்: ஏ.எம்.அர்ஷாத், உப தலைவர்கள்: இல்யாஸ் மொஹிதீன், எம்.எச்.எம்.அஸ்கர், செயலாளர்: எம்.எச்.எம்.பர்ஸான், உதவி செயலாளர்கள்: எம்.என்.எம்.நஸ்ரின், எஸ்.எம்.பௌசான், பொருளாளர்: எம்.ஐ.எம்.இஸ்ரத், உதவி பொருளாளர்: எம்.ஆர்.எம்.ரிமாஸ், மத்ரஸா பொறுப்பாளர்: அஷ்ஷெய்க் எம்.ஏ.அப்துல்லாஹ், மத்ரஸா உதவி பொறுப்பாளர்: எம்.எஸ்.எம்.நஸார்,

ஏனைய நிர்வாக உறுப்பினர்கள்: எம்.என்.எம்.ரம்ஸான், எம்.ஏ.எம்.கியாஸ், எம்.எம்.சப்ரி, டீ.எம்.ரிழ்வான், எம்.ரமீஸ் சுலைமான், எம்.என்.எம்.சிராஜ், எம்.எச்.எம்.ஆஷாத், எஸ்.எம்.ஷிபார், எம்.அனஸ், யாஸீன் முஹம்மது, எம்.எஸ்.எம்.சர்பான், எம்.எச்.எம்.ஷிபான், எச்.ஆர்.எம்.அதாவுல்லா, உஸ்மான் கம்மர், எம்.என்.எம்.ரோஷன், எம்.எப்.எம்.மில்பார், எம்.ஆர்.எம்.பவாஸ், எம்.எம்.யுஸ்ரி ஆகியோர்.

# பதுரியா மத்திய கல்லூரியில் சஞ்சிகை வெளியீடு







மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் விஞ்ஞான பிரிவின் வெளியீடான “பெரகன்” சஞ்சிகையின் இரண்டாவது பதிப்பின் வெளியீடு நேற்று அதிபர் ஏ.எல்.ஏ ரஹ்மான் அவர்களின் தலைமையில் நாகூர்கம நியூமினி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக பிரபல குழந்தை நல மருத்துவரும், எழுத்தாளரும், பேச்சாளருமான எம்.எல். ரைஸ் முஸ்தபா, விசேட அதிதியாக, சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர் எம்.எஸ்.எம். அஸ்லம் கலந்து சிறப்பித்தனர். சர்வதேச ரீதுக்கு நிகராக இந்த நூல் வெளிவந்திருப்பதாக பிரதம அதிதி தனது நூல் விமர்சனத்தில் தெரிவித்ததோடு இதில் ஆசிரியர்கள் பெற்றோர் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(பாரா தாஹீர்: ஹம்தான்)

# இஸ்ரேலிய ராணுவம் ரஃபாவில் நடத்திய இன சுத்திகரிப்பு தாக்குதல்!



**எஸ்.ஏ. சுஃப்யான்**
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்ரேல் நடத்திய எல்லையற்ற வான் வழித்தாக்குதலில் ரஃபாவில் உள்ள ஐ.நா–வின் இடம்பெயர்ந்தோர் முகாமில் இருந்த 45 பேர் கொல்லப்பட்ட நிகழ்வுக்கு சர்வதேச அளவில் கண்டனம் எழுந்துள்ளது. இஸ்ரேலிய ராணுவம் வெறி பிடித்த நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் கொத்து கொத்தாக கொலை செய்யப்பட்டு வருவதும் தொடருகிறது.

இதனை "எதிர்பாராத துயர நிகழ்வு" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு கூறியுள்ளதை பார்க்கும் போது அவர் எந்தவொரு எல்லைக்கும் செல்லும் மோசமான நிலைக்கு சென்று விட்டார் என்பதே உண்மையாகும்.அதே சமயம் ஹமாஸ /க்கு எதிரான போரை தொடரப்போவதாகத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.இந்தத் தாக்குதலை பாலத்தீன மக்களுக்கு எதிரான இனப்படுகொலையின் கொடூர செயல் என இஸ்லாமிய ஒத்துழைப்பு கூட்டமைப்பு நாடுகள் கூறியுள்ளன.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பேசிய நெதன்யாகு, இத்தாக்குதல் "மோசமான துயர நிகழ்வு" என தெரிவித்தார். "அனைத்து இலக்குகளையும் அடையும் வரை போரை முடிவுக்குக் கொண்டுவரும் எண்ணம் இல்லை" என்றார்.

மக்களை பாதுகாக்க "சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும்" மேற்கொள்வது அவசியம் என்று கூறிய அவர், இந்த மோதலில் "தொடர்பில்லாதவர்களுக்கு ஆபத்து நேராமல் தவிர்ப்பதற்கு இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது" என்று தெரிவித்தார்.

அதாவது கசாப்புக்காரன் அஹிம்சா வாதம் பேசுவது போன்ற ஒரு பேச்சை தான் பெஞ்சமின் நிதான்யாகு பேசி இருக்கிறார் என்பதில் ஐயமில்லை. அதேநேரத்தில் ரஃபாவில் போருடன் தொடர்பில்லாத சுமார் 10 லட்சம் பேரை நாங்கள் வெளியேற்றியுள்ளோம். போரில் ஈடுபடாதவர்களுக்கு தீங்கு ஏற்படா வண்ணம் முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் துரதிருஷ்டவசமாக மோசமான தவறு ஏற்பட்டுவிடுகிறது" என நெதன்யாகு அழுத்தமாக தெரிவித்தார்.இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி முடிவுக்கு வருவோம். அதுதான் எங்களின் கொள்கை" என்றார் பெஞ்சமின் நிதான்யாகு.

போர் தொடங்கிய பல மாதங்களுக்குப் பிறகு, டெல் அவிவ் மீது ஹமாஸின் முதல் ஏவுகணைத் தாக்குதல் நிகழ்ந்த சில மணி நேரத்தில் ஞாயிற்றுக்கிழமை ரஃபா மீது இஸ்ரேல் தாக்குதலை தொடங்கியது. அதாவது இஸ்ரேலிய ராணுவம் முழுமையாக பழிக்கு பழி வாங்க வேண்டும் என்ற நோக்கில் தான் இது போன்ற மனித விரோத இன கருவறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை. இந்த தாக்குதலைத் தொடர்ந்து பெண்கள் மற்றும் குழந்தைகள் அடங்கிய 28 பேரின் இறந்த உடல்கள் தங்களுக்குக் கிடைக்கப் பெற்றதாக, மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. மிகவும் கடுமையான குண்டடி காயங்கள், எலும்புமுறிவுகள், மோசமான காயங்கள் மற்றும் தீக்காயங்களுடன் சுமார் 180 பேருக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து மனித உயிர்களின் மதிப்பீடு கீள்ளு கீரையாக மாறி விட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது. இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரசின் நடவடிக்கைகள் முழுமையாக மக்கள் நிறைந்த முகாம்கள் மீதான தாக்குதல்கள், காஸாவில் மக்களின் உயிரை முற்றிலும் அலட்சியமாக கருதுவதை காட்டுகிறது" என்று சர்வதேச சமூகம் கருத்து தெரிவித்து வருகிறது.

கடந்த மாத தாக்குதலில், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், பத்திரிகையாளர்கள், மருத்துவர்கள், மனிதாபிமான உதவிகளைச் செய்துவருபவர்கள் என கிட்டத்தட்ட 36,000 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். 81,000–க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர்.

சமீபத்தில் ஐந்து நாள்களுக்கு முன்பு, பொதுமக்கள் தஞ்சமடைந்திருக்கும் பாதுகாப்பு முகாம்கள் நிறைந்த ராஃபாவில் தாக்குதல் நடத்தக்கூடாது என சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட... இரண்டாவது நாளிலேயே அங்கு இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலின் இந்தத் தாக்குதலுக்கு, பொதுமக்களில் கிட்டத்தட்ட 45 பேர் பலியாகினர்.

உலகநாடுகள் பலவும் இஸ்ரேலைக் கண்டித்தன. சமூக வலைதளங்களில் மில்லியன் கணக்கானவர்கள் `All Eyes On Rafah' என்ற புகைப்படத்தைப் பதிவிட்டுவந்தனர்.

ரஃபா மீதான விவகாரத்தில் இஸ்ரேலின் நட்பு நாடான அமெரிக்காவும் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்ததாக சொல்லப்பட்டாலும்,இதுவரை மனித உயிர்களை இழந்து தவிக்கும் இந்த பேராபத்தான நிகழ்வுகள் நடைபெற பக்க பலமாக இருந்து வந்த நாடு தான் அமெரிக்கா என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இதில் உண்மை என்னவென்றால் அமெரிக்காவால் தயாரிப்பு செய்யப்பட்ட CBU 35 ரக குண்டுகளை வீசி தான் இஸ்ரேலிய ராணுவம் இத்தகைய பேரழிவு பயங்கரத்தை செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அமெரிக்கா அரசு தலைமை இந்த குண்டு வெடிப்பு நடந்த உடன் தங்களுடைய நெஞ்சே வெடித்த போன்றதொரு உணர்வு ஏற்பட்டதாக நாடகமாடியது தற்போது நினைவுக்கு வருகிறது. இந்த நிலையில் அமெரிக்கா கொடுத்த குண்டுகளை பாவிக்க கூடாது என்று அமெரிக்கா எந்தவொரு அழுத்தமும் கொடுத்தாக தெரியவில்லை என்றும், சற்றேக்குறைய 17 கிலோ எடையுள்ள நாசகார குண்டுகளை தான் அப்பாவி பொதுமக்கள் வாசிக்க கூடிய பகுதியில் வீசியதாக New York Times நாளிதழ் தெளிவாக தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. உண்மையில் இது போன்ற நிகழ்வுகள் சர்வதேச சமூகத்தை ஆடி போக செயயதுள்ளதாக அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

இப்போது அமெரிக்கா முதலை கண்ணீர் வடிக்கும் நிலையை உலகம் எப்படி நம்பும் என்பதை ஒவ்வொரு மனசாட்சி உள்ள மனிதனும் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. இதனோடு சீனா மத்திய கிழக்கில் உள்ள சில நாடுகளுடன் கைகோர்த்து கொண்டு இந்த போரை முடிவுக்குக் கொண்டு வர முயற்சி செய்து கொண்டு இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

ரஃபாவில் உள்ள கூடார முகாமில் குறைந்தது 45 இடம்பெயர்ந்த மக்களை இஸ்ரேலிய ஆட்சி திட்டமிட்டு படுகொலை செய்துள்ளது. இது பாலஸ்தீனியர்களுக்கு எதிரான அதன் இனப்படுகொலையில் மற்றொரு காட்டுமிராண்டித்தனமான செயலைக் குறிக்கிறது. கடந்த ஏழு மாதங்களில் ஏற்கனவே பல முறை தப்பி ஓடிய டசன் கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள், இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளால் (ஐனுகு) ஏவப்பட்ட அமெரிக்கா–வழங்கிய ஏவுகணைகளின் புயல் தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டு சிதைக்கப்பட்டுளளனர். யூத ராணுவம் திட்டமிடல் அடிப்படையில் தான் தனது இருப்பிடத்தை உறுதி செய்து கொள்ளும் நடவடிக்கை வாயிலாக தான் இது போன்ற அத்துமீறிய வங்குரோத்து நடவடிக்கைகளை தொடர்ந்து வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது.

இதனிடையே கடந்த ஞாயிறு இடம்பெற்ற இந்த குண்டுவீச்சு என்பது, பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகுவின் பாசிச அரசாங்கம், ரஃபாவில் இஸ்ரேலின் இராணுவத் தலையீட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றத்தின் வெள்ளிக்கிழமை உத்தரவுக்கு நேரடியாக விடுத்த பதிலடியாகும். ஆனாலும் இந்த வெறித்தனமாக தாக்குதலை முழுமையாக நிறுத்தி விட சக்தியற்ற நிலையில் ஐ.நா போன்ற அமைப்புகளின் செயல்பாடுகளை கண்டு உலகம் அதிர்ச்சியில் உறைந்து போய் உள்ளது என்பதே யதார்த்தமான உண்மை.

இதனுடாக யூத சியோனிச ஆட்சியானது, சர்வதே சட்டத்தால் விதிக்கப்படும் எந்தவொரு கட்டுப்பாடுகளுக்கும் கட்டுப்படாது என்பதை இதன் மூலம் தெளிவுபடுத்த விரும்பியுள்ளது. அதாவது நாங்கள் எந்த விதத்திலும் மனித உரிமைகள் மற்றும் மாண்புகளை மதிப்பதில்லை என்று உலகிற்கு தெளிவாக தெரியப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது. பாலஸ்தீனப் பிரச்சினைக்கான அதன் "இறுதித் தீர்வுக்கு" ஏகாதிபத்திய சக்திகளின், முக்கியமாக, அமெரிக்காவின் அசைக்க முடியாத ஆதரவில் அதற்கு முழு நம்பிக்கை இருப்பதால், இவ்வளவு ஆத்திரமூட்டும் வகையில் அதனால் செயல்பட முடிகிறது.

இந்த தாக்குதல் "துல்லியமான வெடிமருந்துகள் மற்றும் துல்லியமான உளவுத்துறையின் அடிப்படையில்" நடத்தப்பட்டது என்று இஸ்ரேலிய இராணுவம் கூறியுள்ளது. "அப்பகுதியில் உள்ள பல பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்" என்பதை இராணுவம் அறிந்திருப்பதாக அதன் அறிக்கை வெறுமனே சுட்டிக்காட்டியுள்ளது. இந்த சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

காஸாவில், இஸ்ரேலிய இராணுவத்தால் மிகவும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் "துல்லியமான வெடிமருந்துகள்" என்பது, அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட கூட்டு நேரடி தாக்குதல் வெடிமருந்துகள் (துனுயுஆ), வெடிகுண்டு கருவிகளுடன் பொருத்தப்பட்ட ஆயுதங்கள் ஆகும். அவை நிலையான ஆயுதங்களை பீளு ஆல் வழிகாட்டப்பட்ட வெடிகுண்டுகளாக மாற்றுகின்றன. நெதன்யாகுவின் ஆட்சி, இனப்படுகொலையை நடத்திக் கொண்டிருப்பதால், அமெரிக்க விமான நிறுவனமான போயிங், 2023 அக்டோபரில் இஸ்ரேலுக்கு குறைந்தபட்சம் 1,800 கருவிகளை அனுப்புவதை துரிதப்படுத்தியது. அப்போதிருந்து, தற்போதைய உத்தியோகபூர்வ இறப்பு எண்ணிக்கையான 36,000ம் பாலஸ்தீனியர்களை படுகொலை செய்வதில் அந்த நிறுவனம் முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

இனப் பேரினவாத சக்தியான யூத சர்வாதிகார அரசு எந்தவொரு எல்லைக்கும் செல்லக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை நன்கு உணர்ந்து கொண்ட நிலையில் தான் அமெரிக்கா அரசு இந்த ஆயுதங்களை இஸ்ரேலிய ராணுவத்திற்கு வழங்கியது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இத்தாக்குதலுக்கு உள்ளான முகாம் அமைந்திருந்த மேற்கு ரஃபாவின், தால் அஸ்–சுல்தான் சுற்றுப்பகுதி பாலஸ்தீனிய குடிமக்களுக்கு "பாதுகாப்பான பகுதி" என்று கூறப்பட்டது. பாலஸ்தீனிய செம்பிறை அமைப்பின் கூற்றுப்படி, இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட பலர், தங்கள் கூடாரங்களில் "உயிருடன் எரிக்கப்பட்டனர்". இந்த தாக்குதலில் 249 பேர் காயமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் குறைந்தபட்சம் எட்டு ஏவுகணைகள் வீசப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் CNN இடம் தெரிவித்தனர். அதேநேரத்தில் மருத்துவமனையில் உயிர் பிழைத்த ஒருவர், "வான்வழித் தாக்குதல்களால் கூடாரங்கள் எரிந்தன, கூடாரங்கள் உருகுகின்றன, மக்களின் உடல்கள் உருகுகின்றன" என்று கூறினார்

இதற்கிடையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், லட்சக்கணக்கான மக்கள் இன்னமும் தஞ்சம் அடைந்துள்ளதாக நம்பப்படும் ரஃபாவின் முகாம்களுக்குள் இஸ்ரேல் நுழைந்தால் அந்நாட்டுக்கான ஆயுத விநியோகம் மட்டுப்படுத்தப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பியிடம் இஸ்ரேலின் தாக்குதல் குறித்தும், அதில், பெண்கள், குழந்தைகள் பலியானது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர், தாக்குதலுக்கு பிந்தைய புகைப்படங்கள் இதயத்தை நொறுக்குவதாகவும் பயங்கரமாக இருப்பதாகவும் விவரித்தார். இது போன்ற பதில்கள் பாதிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களை காப்பாற்ற எந்தவொரு வழி வகையும் தராது என்பதே உண்மையாகும். மேலும் ஜோ பைடனால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளை இந்த தாக்குதல் மீறியுள்ளதாக என வெள்ளை மாளிகை செய்தியாளரிடம் கேள்விக்கு அமெரிக்கா 'கொள்கை மாற்றங்கள் தொடர்பாக பேசுவதற்கு எதுவும் இல்லை. ரஃபாவில் எந்தவொரு பெரிய அளவிலான தரைவழி நடவடிக்கையை மேற்கொள்வதையும் அமெரிக்கா ஆதரிக்காது என்று மட்டுமே கூறி விட்டு சென்று விட்டது ஒரு மழுப்பலான பதிலாகவே நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இஸ்ரேலிய நாடு தனது கொள்கைகளுக்கு மாறாக நடவடிக்கையை எடுத்தால், ஆதரவளிப்பதில் நாங்கள் வேறு விதமான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும் என அதிபர் சொல்லியிருக்கிறார். ஆனாலும் இஸ்ரேலிய ரஃபா மீதான தரை வழியாக பெருந் தாக்குதலை நிகழ்த்த வில்லை என்று அமெரிக்கா கூறுகின்றது. இது போன்ற பாவமான நாசகார தாக்குதலை இஸ்ரேல் நடத்தியதற்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு எழுந்துள்ளது. தாக்குதலைக் கண்டித்து ஸ்பெயின், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் பாலத்தீன ஆதரவாளர்கள் பேரணி மேற்கொண்டனர்.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான மோதலில் மத்தியஸ்தர்களாக செயல்பட்டு வரும் எகிப்து, கத்தார் ஆகிய நாடுகள் மற்றும் ஜோர்டான், குவைத், சௌதி அரேபியா, துருக்கி ஆகிய பிராந்திய நாடுகள் இந்த தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.காஸாவை வாழ்வதற்கு தகுதியற்றதாக மாற்றும் திட்டமிட்ட கொள்கையின் ஒருபகுதிதான் இந்த தாக்குதல் என எகிப்து கூறியுள்ளது. இந்த நடவடிக்கை சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என்றும் தற்போதைய மத்தியஸ்த நடவடிக்கைகளை இது சிக்கலாக்கும் என்றும் கத்தார் தெரிவித்துள்ளது. தொடர்ச்சியாக போர் குற்றங்களில் இஸ்ரேல் ஈடுபட்டு வருவதாக ஜோர்டான் குற்றஞ்சாட்டியுள்ளது. இஸ்ரேல் தொடர் படுகொலைகளில் ஈடுபடுவதாக சௌதி அரேபியா குற்றம் சாட்டியுள்ளது. துருக்கி அதிபர் எர்துவான் இந்த காட்டுமிராண்டித்தன தாக்குதல் மற்றும் கொலைகளுக்கு பொறுப்பானவர்களை பொறுப்புக்கூறச் செய்வோம் என உறுதி பூண்டுள்ளார்.

எட்டு மாதங்களாக தொடரும் இந்த அவலமான சூழ்நிலை காணப்படுகிறது.ஆனால் அமெரிக்காவின் ஆட்சியாளர்களால் இஸ்ரேலிய அரச தலைமையை ஏதும் செய்ய முடியாத அளவுக்கு கையாலாகாத நிலை உள்ளது என்பதை நாம் நம்ப கூடிய அளவில் இல்லை என்பதே உண்மையாகும். அமெரிக்கா பாதுகாப்பு கவுன்சிலர் ஜான் கிர்பி, பாலஸ்தீன மக்களின் மோசமான நிலையை அமெரிக்கா கண்முடித்தனமாக திரும்பிக் கொள்ளவில்லை என்று தெரிவித்தார், ரஃபா நகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இஸ்ரேலுக்கான ஆயுதங்களை நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்து இருந்த நிலையில், தற்போதைய இஸ்ரேலிய தாக்குதல் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் வாக்குறுதிகளை சோதித்துள்ளது. இருப்பினும் இந்த அவலமான சூழ்நிலை பின்னணியில் வலுவான அரசியல் சூட்சுமங்கள் இருப்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அரபு பிரதேசங்களை ஒட்டுமொத்த வளத்துடன் கூடிய இலாப நோக்கில் தான் மேற்கு உலகம் பயன்படுத்தி வருகின்றது. இந்த ஜரோப்பிய, அமெரிக்கா இரண்டும் இணைந்த கூட்டு களவாணி தனம் மற்றும் வளங்களை சுரண்டல் நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்றால் அங்கு ஒரு சக்தி தமக்கு தேவையான ஒன்று என்பதை நன்கறிந்த நிலையில் தான் இஸ்ரேலிய தேசம் உருவாக்கப்பட்டது. அந்த உச்சகட்ட சதியின் செயல்பாடுகள் தான் தற்போது அரங்கேற்றம் செய்யப்பட்டு வருகிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை.

இறுதியாக வரலாற்றை ஆய்வு செய்து பார்த்தால் எந்த நிலையிலும் சர்வாதிகார சக்திகள் வாழ்ந்ததாக தெரியவில்லை. இனவாத சக்தியான பெஞ்சமின் நிதான்யாகு வின் அரச படைகள் எல்லை மீறிய சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்ட முயற்சி செய்து வருவதைக் காண முடிகிறது.

இரட்டை நாடுகள் கண்டிப்பாக தேவை என்பதே உலகின் பெரும்பாலான தேசங்களில் வாசிக்க கூடிய பொதுமக்களின் கருத்தாக இருக்கிறது.இந்த முயற்சியை முழுமையாக முறியடித்து விட்டு மீண்டும் தங்களின் வெற்றியை நிலைநிறுத்த வேண்டும் என்று இஸ்ரேலிய தேசம் முழுமையாக நம்புகிறது.சொந்த மண்ணின் மைந்தர்களான முஸ்லிம் மக்களை அவர்களின் வாழ்வாதாரங்களை யூதர்கள் தொடர்ந்து நாசம் செய்து வருகின்றனர். கடந்த எட்டு மாதங்களாக பல இலட்சக்கணக்கான மக்கள் சொந்த தேசத்தில் அங்கும் இங்குமாக இடம் பெயர்ந்து வாழும் வாழ்க்கை உளவியல் ரீதியாக அந்த மக்களை பாதிப்படைய செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இறுதியாக ஒன்று மட்டும் நிச்சயம். இன்று பாலஸ்தீன சமூகம் விதையை விதைத்து கொண்டு இருக்கறது என்பது தான் உண்மை.இன்று மரண ஓலங்கள் மூலம் விதைக்கப்படும் விதைகள் நாளை மிகப் பெரிய விருட்சமாக வளர்ந்து நிற்கும் நிலையில் இஸ்ரேலிய அரசும் அந்த தேசமும் ஒன்றும் இல்லாமல் போகும் என்பதை நாம் உறுதியாக இந்த



# வடமேல் மாகாணம் தன்னிறைவு பொருளாதார ஆற்றலை நோக்கி நகரவேண்டும்

## ஆளுனர் நஸீர் அஹமட் தெரிவிப்பு



(எம்.யூ.எம்.சனூன், எம்.எச்.எம் சியாஜ்)

வடமேல் மாகாணம் வெறுமனே மத்திய அரசாங்கத்தின் நிதியை மாத்திரம் எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல், மாகாணத்தின் வருமான வழிகளை அதிகரித்து, அதன் ஊடாக மாகாணத்தின் தேவைகளை சுயமாகப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையிலான தன்னிறைவுப் பொருளாதார ஆற்றலை நோக்கி நகரவேண்டும் என்று வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் (30) குருநாகல், வடமேல் மாகாண ஆளுனர் அலுவலகத்தில் ஆளுனர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகார சபையின் பிரதான வருமானம் தொழிற்பயிற்சி நெறிகளை நடத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் போன்றவற்றின் ஊடாக ஈட்டப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் நன்னீர் மீன்வளர்ப்பு, கேபிள் கார் செயற்திட்டம், வனஜீவராசிகள் பூங்கா, கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் கண்காட்சி மையங்கள், சூழலுக்கு இயைபான சுற்றுலாத் துறை அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்றவற்றின் ஊடாக மாகாணத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும், அதற்காக குறுகிய மற்றும் நீண்ட கால செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்து முன்வைக்குமாறும் ஆளுனர் நஸீர் அஹமட் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் இலங்கையின் மிகப் புராதன ராசதானிகளான தம்பதெனிய, யாப/ஹுவ போன்றவற்றை ஒருங்கிணைத்தும், கீர்த்தி பெற்ற ரிதீ விகாரை உள்ளிட்ட தலங்களையும் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தெடுக்கும் வகையிலான கேந்திர நிலையங்களாக மாற்றியமைக்கத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், பொருத்தமான இடங்களில் கேபிள் கார் வசதிகளை ஏற்படுத்துமாறும், வில்பத்து மற்றும் கல்பிட்டிப் பிரதேசத்தை கடல் வழியாக இணைக்கும் பிரதேசத்தில் சூழலுக்கு இயைபான (எகோ ப்ரெண்ட்லி) சுற்றுலா செயற்பாடுகளை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன், அங்கு சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்துக்கான படகு சேவைகளின் வசதிகளை மேம்படுத்துமாறும் ஆளுனர் நஸீர் அஹமட் இங்கு சுட்டிக்காட்டினார்.

இக் கலந்துரையாடலின் போது மாகாண பிரதம செயலாளர், ஆளுனரின் செயலாளர்,ஆளுனர் அலுவலக அதிகாரிகள், வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பேருவளை மாணவி பாத்திமா நிஹ்லா அகில இலங்கை ரீதியில் நான்காமிடம்

(பீ.எம் முக்தார்)



இவ்வருடம் வெளியாகிய கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகள் அடிப்படையில், பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசியப் பாடசாலை மாணவி கே.எப்.பாத்திமா நிஹ்லா உயிரியல் விஞ்ஞான பிரிவில் அகில இலங்கை ரீதியில் நான்காம் இடமும் மாவட்ட ரீதியில் முதலிடமும் பெற்றுள்ளார்.

உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய இம்மானவி அனைத்துப் பாடங்களிலும் யு சித்தி பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது.

இவ்வாறு சாதனை படைத்த மாணவி பேருவளை பெலஸ்பாத் பகுதியை சேர்ந்த கம்சூல் பைஸர் மற்றும் ஃபாத்திமா ஹரீஸியா தம்பதிகளின் புதல்வியாவார்.

இது பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் பாடசாலை வரலாற்றின் ஓர் சாதனை என்று பாடசாலை அதிபர் எஸ்.ஐ குமார் கூறியதோடு, இதற்காக உழைத்த ஆசிரியர்கள்,பெற்றோர்கள் மற்றும் கல்வி நலன்விரும்பிகள் மற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# புத்தளம் எழுவன்குளம் ஊடாக மன்னார் செல்லும் பாதை திறப்பு தொடர்பாக ஆராய்வு!



புத்தளம் எழுவன்குளம் ஊடாக மறிச்சிக்கட்டி ,சிலாவத்துறை செல்கின்ற வீதியை மீள் திறப்பது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பான கள ஆய்வுக்காக நீதியமைச்சின் விஷேட குழுவொன்று கள ஆய்வில் ஈடுபட்டது. நீதியமைச்சரின் முஸ்லிம் விவகார இணைப்பாளரும் வவுனியா சிறைச்சாலை மேற்பார்வைக் குழுவின் தலைவருமாகிய நிப்ராஸ் முஹம்மத் தலைமையில் இக் குழு மன்னாருக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தது. இக் குழுவில் நீதியமைச்சரின் பாராளுமன்ற செயலாளர் எல்விட்டிகல,வட மாகாண வருமான வரி திணைக்கள தலைவர் சட்டத்தரணி பந்துல, கொழும்பு மாவட்ட சிறைச்சாலை குழு உறுப்பினர் ஹைஸம் உட்பட மேலும் பல பிரமுகர்களும் இதில் பங்கேற்றிருந்தனர் இக் குழுவினர் இப் பாதையை மீளத் திறப்பது பற்றி பிரதேச மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தனர். இக் கள ஆய்வு தொடர்பான தகவல்களை எதிர்வரும் 10 ஆம் திகதி நீதியமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளதாக முஸ்லிம் விவகார இணைப்பாளர் நிப்ராஸ் முஹம்மத் தெரிவித்தார்.

# நபியவர்கள் பல்லினச் சூழலுக்கு மத்தியில் முன்மாதியாக வாழ்ந்து காட்டியவர்





இஸ்லாம் சமயம் பல்லினச் சூழலில் கலந்து வாழ்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகின்றது. நபி (ஸல்) அவர்களும் பல்லினச் சூழலுக்கு மத்தியில் முன்மாதியாகவே வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் அதிகமாக யூதர்களுடனே கொடுக்கல் வாங்கல் செய்துள்ளார்கள் என்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் மபாஸ் சனூான் தெரிவித்தார்.

வெசக் வாரத்தை முன்னிட்டு கெலிஓய, நிவ் எல்பிடிய, சிறிவிஜித மகா விகாரையில் சிங்கள - முஸ்லிம் மக்களுக்ககான ஒரு ஒன்றுகூடல் வைபவும் விருந்துபசார நிகழ்வும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறையின் பேராசிரியர் முவெடகம ஞாணனந்த தேரரின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றுகின்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகின்ற போது

அல்குர்ஆன் முஸ்லிம்களின் சமய நூல் என்றே அனைவரும் அறிகின்றனர். என்றாலும் அதில் மூன்றில் இரண்டு பகுதியில் யூதர்களின் பிரதான போதகரான மோஸஸ் பற்றியே சொல்லப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜீவனை வாழவைப்பவர் முழு மனித சமுதாயத்தையும் வாழ வைத்தவர் போலாவார் என்று போதனை செய்துள்ளார்.

இலங்கை முஸ்லிம்களின் தாய் வழி இறுதியில் சிங்கள சமுகத்தைச் சென்றே சேருகின்றது. அவ்வகையில் இலங்கை முஸ்லிம்களும் சிங்களவர்களும் ஒரு தாயின் இரண்டு பிள்ளைகளாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே கண்டி மன்னன் தளதா பெரஹராவின் போது பொருட்களை கொண்டு வருகின்ற - கொண்டு செல்லுகின்ற பொறுப்பை முஸ்லிம்களிடம் ஒப்படைத்து இருந்தான். அன்றைய காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான ஒரு பள்ளிவாசலை அமைப்பதற்கு விகார - தேவாலய சட்டத்தின் கீழ் இருந்த ஒரு காணியை கண்டி அரசன் கொடுத்து உதவினான். அந்தப் பள்ளிவாயலின் மாதாந்த செலவுகளுக்காக நிதி வழங்குகின்ற கடமை முஸ்லிம்களுக்கு மாத்திரம் இருக்கவில்லை. சிங்களப் பிரதானிகளின் அனுமதியுடன் அது முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் என்றதாக அரச ஆணை பிறப்பிக்கப்பட்டு இருந்தது. அன்று சிங்களவர்களும் முஸ்லிம்களும் சிங்களம், முஸ்லிம் என்ற பேதமில்லாத அந்தளவுக்கு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் ஏனைய இனங்களுக்கு மத்தியில் முஸ்லிம்களைப் பற்றி உருவாக்கப்பட்டதாக இருக்கின்ற சித்திரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரே தோன்றியது. சர்வதேச ஊடகங்களும் சர்வதேச அரசியலுமே இதற்கான பின்புலக் காரணங்களாக இருக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகளில் கனிய எண்ணை வளம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரே முஸ்லிம்களை தவறாகச் சித்தரிக்கின்ற கலாசாரம் உருவானது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கண்டி மாவட்டப் பாராளமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, நிவ் எல்பிடிய ஜும்மப் பள்ளிவாயலின் பேஷ் இமாம் ஏ. எம். பாரிஸ், சமூக சேவகர் ஆர். எம். பாஸில் உட்பட பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண முஸ்லிம்களின் உரிமையில் கை வைத்தவர்கள் இப்போது கல்வியையும் சீரழிக்க முனைகிறார்கள்

## ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான்



கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல தேசிய ரீதியாகவும் பிரபலமான திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் உயர்தர பரீட்சையின் பெறுபேறு வெளியிடப்படாமல் இடைநிறுத்தம் செய்யப்பட்ட விடயம் இலங்கையில் இன்னும் மனிதாபிமானம் உயிர்வாழ கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையே உணர்த்துகிறது.

அந்த மாணவிகளின் வாழ்வோடு விளையாட முனையும் யாரையும் நாம் அனுமதிக்க முடியாது. மாணவிகளின் உயர்தர பரீட்சையின் பெறுபேற்றை உடனடியாக வெளியிட பரீட்சை ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் மேலும், பரீட்சை மண்டபத்தில் தமது காதுகளை இஸ்லாமிய மாணவிகள் மூடி பரீட்சை எழுதினார்கள் என்ற குற்றச்சாட்டில் இந்த இடைநிறுத்தம் இடம்பெற்றுள்ளது என்பதை அறிந்து கவலைப்பட மட்டுமே முடிந்தது. காதுகளை மூடி பரீட்சை எழுதியமை தொடர்பில் பரீட்சை மண்டபத்தில் கவனித்திருக்க வேண்டிய விடயம். அவர்கள் தொடர்பில் சந்தேகங்கள் இருந்தால் மண்டபத்திலையே அதனை முடித்திருக்க முடியும்.

முஸ்லிம் மாணவர்கள் யுத்தம் முடிந்த பின்னர் கடுமையாக கல்வியில் கவனம் செலுத்தி வருவதை தடுக்கும் விதமாக நடைபெற்ற சம்பவமாகவே இதனை நோக்கவேண்டியுள்ளது. முஸ்லிங்களின் கல்வியை நசுக்க எடுத்த இனப் பாகுபாட்டின் உச்சமாகவும் இந்த சம்பவத்தை நோக்கலாம். இந்த இனவாத செயலை உடனடியாக ஜனாதிபதி, பிரதமர், கல்வியமைச்சர் ஆகியோர் கவனத்தில் எடுத்து தீர்வை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும்.

பரீட்சை மண்டபத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய இந்த விடயத்தை பெறுபேற்றை இடைநிறுத்தும் அளவுக்கு கொண்டு சென்ற பரீட்சை மேற்பார்வையாளர் ஆளுமையற்ற கல்வி பரப்புக்கு பொருத்தமற்ற ஆசிரிய தொழிலை கேவலப்படுத்தும் மனநிலை கொண்ட ஒருவராகவே நான் பார்க்கிறேன். ஒரேமொழியை பேசும் சகோதர இன மாணவிகளின் உரிமைகளில் கை வைப்பது சகோதரத்துவத்துக்கு ஆரோக்கியமானதல்ல. பிள்ளைகளினதும் பெற்றோரினதும் இன்றைய மோசமான மனநிலையை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுடன் பரீட்சை ஆணையாளர் உடனடியாக மாணவர்களின் பெறுபேற்றை வெளியிட முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் இந்த விடயத்தில் சகல முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளும், சிவில் அமைப்புக்களும் ஒன்று பட வேண்டும். இது ஒரு சமூகப் பிரச்சினை மட்டுமல்ல உரிமை சார்ந்த பிரச்சினையும் கூட. கிழக்கு மாகாண முஸ்லிம் விரோத செயற்பாடுகளின் தொடர்ச்சியாகவே இதனை நோக்கவேண்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

## மனநலமும் ஆலோசனையும் 32

# எதிர்மறை எண்ணங்களை அகற்றுதல்

எதிர்மறை சிந்தனை என்பது நாம் எம்மை பற்றியும் எம்மை சுற்றியுள்ளவை பற்றியும் பிழையாக, தவறாக அல்லது மோசமாக சிந்திக்கும் முறையை குறிக்கிறது.

இப்படி தொடர்ந்து நாம் எதிர்மறை எண்ணங்களை அனுபவிக்க ஆரம்பித்தால் அப்படியே அந்த அனுபவம் நீடித்தால் நாம் எம்மை பற்றியும் நாம் வாழும் உலத்தை பற்றியும் நினைக்கும் விதத்தை தீவிரமாக பாதிக்கச் செய்துவிடும்.

நாம் நினைக்கும் விதத்தின் விளைவு ஒன்றோ சிறந்த பலன்கள் கொண்ட நன்மை தரும் முடிவாக ஆகலாம் அல்லது எம்மை அச்சுறுத்தி தீங்கு ஏற்படுத்தும் முடிவாக ஆகலாம்.

நலவையும் தீமையையும் தீர்மானிக்கும் கருவியாக எமது சிந்தனை இருக்கிறது. சரியை சரியாகவும் பிழையை பிழையாகவும் அறியும் ஆற்றல் எம் சிந்தனைக்கு உண்டு. அதனால் தான் நன்மையையும் தீமையையும் பிரித்தறியும் ஆற்றலை இறைவன் மனிதனுக்கு கொடுத்திருக்கிறான். ஆதலால் எமது மனவலிமையை வளர்க்கவும் எண்ணங்களை பயனுள்ளவையாக மாற்றவும் வேண்டுமானால் எதிர்மறை சிந்தனைகள் வருவதை அறிந்து அவற்றை தடுத்து நிறுத்த நாம் எம்மை பழக்கிக் கொள்ள வேண்டும்.

எதிர்மறை சிந்தனையை தடுப்பதற்கான பல வழிகள் ஒன்று நேர்மறையை சிந்தனையை வளர்க்கும் ஆற்றலை வலுப்படுத்திக் கொள்வதாகும். உண்மையான, நேர்மையான, நீதியான, அழகான, ஆக்கமான, பயனான எண்ணங்களால் எங்கள் மனதை நாம் நிரப்பிக்கொள்ளும் போது எதிர்மறை எண்ணங்கள் வேரூண்ட மனம் இடம் தராது.

எங்கள் மனதை ஒரு தோட்டமாக கற்பனை செய்து பார்ப்போம். அந்த தோட்டத்தில் நாம் என்ன விதைகளை விதைக்கப் போகிறோம்?

அவை நம்பிக்கையின் விதைகளா...

அன்பின் விதைகளா... அல்லது சந்தேகம், பயம் விரக்தி போன்ற விதைகளா? என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.

ஒரு தோட்டக்காரன் தன் தாவரங்களை வளர்ப்பது போல, நாம் நமது மனத்தோட்டத்தில் நல்ல, பயனுள்ள எண்ணங்களை வளர்க்க வேண்டும். ஏனென்றால் இந்த எண்ணங்களில் இருந்துதான் நமக்குள் உண்மைகள் பூக்கின்றன

தோட்டக்காரன் களைகளை வேரோடு பிடிங்கி அகற்றுவது போன்று எம் மனதில் தோன்றும் எதிர்மறை எண்ணங்களை வேரோடு பிடுங்கி எறிந்துவிட வேண்டும்.

இதனோடு நாம் தவறாமல் செய்ய வேண்டிய ஒரு அழகான செயல் முறை அழகான ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் மனதில் உருவாக இறைவனை பிரார்த்தனை செய்வதாகும்.

– இறைவா, நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொண்ட எண்ணங்களால் என் மனதை நிரப்பிவிடு

– என்னைச் சூழ்ந்துள்ள நல்லவற்றின் மீது கவனம் செலுத்த உதவி செய்துவிடு

– உனது வற்றாத அன்பில் நம்பிக்கை வைக்க என் மனதுக்கு இடம் கொடு

– நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய் என்பதை உணர்த்திவிடு

– வரவிருக்கும் சவால்களை எதிர்கொள்ள எனக்கு மன வலிமையை தந்துவிடு

– என் மனதை தைரியத்தால் உறுதியாக்கிவிடு

– என் மனதைப் புதுப்பித்து, என் எண்ணங்களை மாற்றியமைக்க வாய்ப்புகளை காட்டித் தந்துவிடு

– என் மனத் தோட்டத்தில் பயத்தை அகற்றி நம்பிக்கையின் விதைகளை விதைத்துவிடு

– உன்னதமானது, சரியானது, தூ ய்மையானது, அழகானது மற்றும் போற்றத்தக்கது எது என்பதை நோக்கி என் எண்ணங்களை வழிநடத்திவிடு......!

இப்படி பிரார்த்தனை செய்யலாம். அத்துடன்

– என்னால் என் வாழ்க்கையில் அமைதியையும் நேர்மறையையும் கொண்டு வர முடியும்.....!

– இறை ஆசீர்வாதங்களில் கவனம் செலுத்தி நன்றியுணர்வுள்ள மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள முடியும்...!

– மனதை ஆரோக்கியமான எண்ணங்கள் கொண்டு வளப்படுத்த முடியும்...!

போன்ற உறுதிமொழிகளையும் எடுத்து நல்ல எண்ணங்கள் கொண்ட மனதை உருவாக்கும் பயணத்தை தொடங்க வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் பெறுபேறு இடைநிறுத்தம் இனப்பாகுபாட்டின் வெளிப்பாடு

**– இம்ரான் எம்.பி. –**

(மூதூர் பறூஸ்)

திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் பெறுபேறு இடைநிறுத்தம் இனப் பாகுபாட்டின் வெளிப்பாடு என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

பரீட்சை மண்டபத்தில் தமது காதுகளை மூடி பரீட்சை எழுதினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இந்த இடைநிறுத்தம் இடம்பெற்றுள்ளது.

காதுகளை மூடி பரீட்சை எழுதியமை பரீட்சை மண்டபத்தில் கவனித்திருக்க வேண்டிய விடயம். அது ஏனைய பரீட்சார்த்திகளை பாதிக்கின்ற விடயமும் அல்ல.

இந்த விடயங்களை சகல தரப்பினருக்கும் தெளிவு படுத்திய பின்னரும் பெறுபேறு இடைநிறுத்த



பட்டுள்ளமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

சாஹிரா கல்லூரியின் வளர்ச்சியை சகிக்க முடியாதவர்களின் இனப் பாகுபாட்டின் வெளிப்பாடு இதுவென்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

பரீட்சை மண்டபத்தில் தீர்க்கப் பட்டிருக்க வேண்டிய இந்த விடயத்தை பெறுபேற்றை இடைநிறுத்தும் அளவுக்கு கொண்டு சென்ற பரீட்சை மேற்பார்வையாளரின் மனநிலையை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஒரேமொழியை பேசும் நாம் இப்படி பிள்ளைகளின் உரிமைகளில் கைவைப்பது ஆரோக்கியமானதல்ல. பிள்ளைகளினதும் பெற் றோரினதும் இன்றைய சோகமான மனநிலையை சம்பந்தப் பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இது குறித்து இன்று பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளேன்

இந்த விடயத்தில் சகல முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளும் ஒன்று பட வேண்டும். இது ஒரு சமூகப் பிரச்சினை.

கிழக்கு மாகாண முஸ்லிம் விரோத செயற்பாடுகளின் மற்றொரு வடிவம் இது.

# 23 வருட பூர்த்தியை கொண்டாடிய ஆயிஷா சித்தீக்கா





(பாரா தாஹீர்)

மாவனல்லை ஆயிஷா சித்தீக்கா உயர் கல்விக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு, 23 வருட பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகள் வைத்தியர் ரைஸ் முஸ்தபா அவர்களின் தலைமையின் கீழ் வளாக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் ஒருங்கிணைப்பாளர் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் எம்.ஏ.எம்.நிஸ்தார் ஒருங்கிணைப்பில், இவ் உயர் பீடத்தின் ஸ்தாபக தலைவர், காலஞ் சென்ற மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீம் நினைவு முத்திரையும், அவரைப் பற்றிய நினைவு நூலும்,புதிய வகுப்பறை கட்டிடமும்,மாணவியருக்கான முதலாவது நவீன தப்ஸீர் விளக்கக்கூடமும் இந் நிகழ்வில் திறந்து வைக்கப்பட்டன.

இதில் சிறந்த ஆளுமையுள்ள மாணவியருக்கும், இப் பிரதேசத்தில் சிறந்த விளங்கிய விஷேட பிரமுகர்களுக்கும் நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன.

இதில் பிரதம அதிதியாக ஒஸ்தாத் எம்.ஏ.எம்.மன்சூர் அவர்களும்,அதிதிகளாக முன்னாள் முஸ்லிம் கலாச்சார திணைக்கள பணிப்பாளர் பைசல் ஆரிப்தீன், A.S.P. கப்பார், ஒஸ்தாத் ஹஜ்ஜூல் அக்பர் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கற்பிட்டி அல் ஹிரா பாடசாலையின் அதிபர்
## அஸ்ரப் அலி 36 வருட ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு




(எம்.எச்.எம் சியாஜ், எம்.யூ எம் சனூன்)

கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் அஸூரபு அலி என்று அழைக்கப்படும் அதிபர் சேவை தரம் - 1 ஐச் சேர்ந்த அஸ்ரப் அலி அதிபர் 36 வருட ஆசிரியர் சேவையிலிருந்து 2024 /06/01 ஓய்வு பெறுகின்றார்.

இவர் ஆரம்ப கல்வி தொடக்கம் உயர் கல்வி வரை அல் அக்ஸ ா தேசிய பாடசாலையில் கல்வி கற்றுள்ளார், உயர் கல்வியை விஞ்ஞானப் பிரிவில் கற்று அதனை கைவிட்டு நண்பர்களின் உதவியுடன் சுயமாக கலைப்பிரிவு பாடங்களை நான்கரை மாதத்தில் கற்று இறைவனின் உதவியால் 1987 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இவர். அன்று நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாத யுத்த சூழ்நிலை காரணமாக பட்டப்படிப்பை இடையில் கைவிட்டுவிட்டார்.

எனினும் இவரின் தொடர் முயற்சியின் பலனாக 1989. 09.15 இல் ஆசிரியர் நியமனம் பெற்றார் .

தனது முதல் ஆசிரியர் நியமனத்தை கீரிமுந்தல் டச்பே றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் பெற்று 1989.09.15 தொடக்கம் 1991. 07.31 வரை கடமையாற்றிய அவர், 1991.08.01 முதல்

கற்பிட்டி முஹத்துவாரம் முஸ்லிம் வித்தியாலயத்திற்கு இடம் மாற்றம் பெற்று அங்கு 1998. 06.28 வரை சுமார் ஏழு வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து 1998.06.29 இல் இருந்து 2000.08.03 வரை உதவி ஆசிரியராகவும் பதில் அதிபராகவும் கற்பிட்டி கண்டல்குடா முஸ்லிம் வித்தியாலயம் கடமையாற்றிய இவர் 2000.08.04 தொடக்கம் SLPS iii தரம் பெற்று அதிபராக கண்டக்குடா பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

மேலும் 2004.11.13 இல் SLPS ii தரத்தையும் 2004.11.13 இல் SLPS i தரத்தையும் பெற்றுக்

கொண்டதுடன் 2014.03.06 வரை கண்டல்குடா முஸ்லிம் வித்தியாலயத்தில் கடமையாற்றினார். தொடர்ந்து 2014.03.07 தொடக்கம் 2020.02.06 வரை கற்பிட்டி பள்ளிவாசல்துறை முஸ்லிம் வித்தியாலயத்தில் உதவி அதிபராகவும் கடமை புரிந்தார். அடுத்து கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலை அதிபராக 2020.02 06 பொறுப்பேற்று ஓய்வு பெறும் வரை கடமையாற்றியுள்ளார்.

மேற்படி அதிபரின் 36 வருட ஆசியர் சேவையை பாராட்டி கௌரவிக்கும் முகமாக இன்று கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையில் ஆசிரியர்களால் பிரியாவிடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# போலி ஊடக கற்கை நெறிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு முஸ்லிம் மீடியா போரம் வேண்டுகோள்

அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களால் நடாத்தப்படும் போலியான ஊடக கற்கை நெறிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது அதிகரித்து வரும் போலியான ஊடக கற்கை நெறிகள் மற்றும் கருத்தரங்குகள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வொன்றினை வழங்கும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

”இளைஞர் யுவதிகளை இலக்கு வைத்து இவ்வாறான போலி ஊடக கற்கை நெறிகள் தற்போது நாட்டின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருவதை நாம் அவதானிக்கிறோம்.

அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களின் பெயரிலும் ஊடகங்கள் மூலம் பிரபல்யம் வாய்ந்த சில தனிநபர்களின் பெயர்களிலும் முன்னெடுக்கப்படும் இக்கற்கை நெறிகள் மூலம் நூற்றுக் கணக்கான தமிழ் பேசும் இளைஞர் யுவதிகள் தவறாக வழிநடாத்தப்படுவதாக எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சில இடங்களில் இலவசம் என்று விளம்பரப்படுத்தி பின்னர் மோசடியான முறையில் கட்டணம் அறவிடப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அது மாத்திரமல்லாமல், இலங்கையிலுள்ள முன்னணி ஊடக நிறுவனங்களில் தொழில் பெற்றுத் தரப்படும் என்ற உறுதிமொழியும் இந்த போலி ஊடக கற்கை நெறிகளின் போது வழங்கப்படுகின்றது.

எனினும் அவ்வாறான தொழில்களோ அல்லது சான்றிதழோ கூட வழங்கப்படாமல் பல இளைஞர்கள் நடுத் தெருவில் கைவிடப்பட்ட விடயமும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இளைஞர் யுவதிகள் மற்றும் பெற்றோர் மிக விழிப்புடன் இருக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இன்று பாடசாலைக் கல்வித் திட்டத்தில் உயர் தரத்தில் ஊடக கல்வி ஒரு பாடமாக உள்ளவாங்கப்பட்டுள்ளமையினால், ஊடகத் துறையில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்கள் அதனைத் தொடர முடியும்.

இதன் மூலம், களனி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் ஆகியவற்றில் இளமாணி கற்கை நெறிக்காக நுழைய முடியும்.

இதற்கு மேலதிகமாக கொழும்பு பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம், தென் கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ் மொழி மூலம் ஊடகத் துறையில் டிப்ளோமா கற்கை நெறிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான கற்கை நெறிகளை மேற்கொள்வதன் மூலம் தங்களின் கல்வித் தரத்தினை அதிகரிப்பதுடன், பல்வேறு பயிற்சிகளையும் பெற முடியும். இதற்கு மேலதிகமாக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் ஊடக கருத்தரங்குகள் மற்றும் கற்கை நெறிகளையும் இளைஞர் யுவதிகள் தொடர முடியும்.

அந்த வகையில் ஓர் ஊடகப் பயிற்சி நெறியினை தெரிவுசெய்ய முன்னர் அப்பயிற்சி நெறியை நடாத்தும் நிறுவனத்தின் நம்பகத்தன்மை, அதன் வளவாளர்களின் தகைமை, கற்கைநெறியின் பெறுமதி தொடர்பில் நன்கு ஆராயுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் இளைஞர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயத்தில் மேலதிக வழிகாட்டல்கள் தேவைப்படின் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மின்னஞ்சல் முகவரியான muslimmediaforum@gmail.com ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 11வது உலக நீர் மன்றத்தை சவூதி நடாத்தத் தீர்மானம்




(காலித் ரிஸ்வான்)

*11 வது உலக நீர் மன்றத்தை 2027ஆம் ஆண்டில் சவூதி அரேபியா நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது இந்தோனேசியாவில் நடைபெற்ற உலக நீர் மன்றத்தின் 10 வது அமர்வின் நிறைவு விழாவின் போது அறிவிக்கப்பட்டது. இதில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்கள் அமைச்சர்கள் 160 நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் பல்வேறு சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.*

*11வது உலக நீர் மன்றம் ”ஒரு சிறந்த எதிர்காலத்திற்கான நடவடிக்கை” என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளதோடுஇ உலகளாவிய நீர் சார்ந்த பிரச்சினைகளை அனுகுவதிலும் பிராந்திய மற்றும் சர்வதேச நீர் முன்முயற்சிகளை ஆதரிப்பதிலும் மற்றும் சவூதி அரேபியாவின் விஷன் 2030 திட்டத்துடன் இணைந்த நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கி செயல்படுவதிலும் அந்நாட்டுத் தலைமையின் ஆர்வத்தை பிரதிபலிக்கிறது.*

*அந்நாட்டுச் சுற்றுச்சூழல் அமைச்சர் அப்துல் ரஹ்மான் அல்-ஃபத்லி இது பற்றி கருத்து தெரிவிக்கையில் சவூதி தலைமையின் குறிப்பிடத்தக்க ஆதரவும் வழிகாட்டல்களும் நீர் துறையில் சவூதியின் தரத்தை சர்வதேச ரீதியாக உயர்த்தியுள்ளது இது குறிப்பிடத்தக்க இந்த உலகளாவிய மன்றத்தை நடத்துவதற்கான வாய்ப்பிற்கு வழிவகுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.*

*உலகளாவிய நீர் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்காக சர்வதேச ஆதரவைப் பெறவும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைக்கவும் ரியாத் நகரில் உள்ள உலக நீர் அமைப்பை அந்நாட்டு பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நிறுவியமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.*






கல்முனை மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் ஏற்பாட்டில் ஐ. சீ. ரீ. ஆங்கில பாட நெறிகளுக்கான கருத்தரங்கு கல்லூரியில் இடம்பெற்றது.(30) கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், கல்லூரியின் ஸ்தாபகருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சுமார் நாநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட இவ்கருத்தரங்கு நிகழ்வில் சில மாணவர்களுக்கு பிரதம அதிதி முழுமையாக கற்கை நெறியை இலவசமாக கற்பதற்கான புலமை பரிசில்களும் வழங்கி வைத்தார்.

(எம். எப். றிபாஸ்)






# நினைப்பவை யாவும் நடந்துவிட்டால்!

பயாஸா பாஸில்

நினைக்கும் மாத்திரத்தில் எதுவும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. அதே போல் நாம் நினைக்கும் அனைத்தும் நடப்பதும் சாத்தியமில்லை. அதற்காக வாழ்க்கையை கவலைப்பட்டுக் கொண்டே வாழ்வது சரியா ..?

வாழ்வை வெறுக்கலாமா..?

சற்று சிந்தித்துப் பாருங்கள்..,

நீங்கள் நினைத்து ஏதாவது ஒரு விடயம் கைக்கெட்டும் தூரம் வரை வந்துவிட்டு கையில் அகப்படாமலேயே மறைந்து விட்டது என்றால் , கவலை கழுத்து வரை இருக்கும் அல்லவா...?!

ஆம், நிச்சயமாக இருக்கும். கண்ணில் தென்படும் எல்லா பொருட்களையும் தூக்கி போட்டு உடைக்க தோன்றும். எரிச்சலாக இருக்கும். காண்பவற்றையெல்லாம் வெறுக்கத் தோன்றும்..

ஆ.... சற்றுப் பொறுங்கள்..

அதே நேரம்.. அதற்குப் பகரமாக நீங்கள் நினைத்தே பார்த்திராத ஒரு விடயம் , ஒரு வெகுமதி உங்களை நாடி வந்திருக்கும். உங்களை ஆச்சரியப்படுத்தியிருக்கும். பின்.., அநியாயத்திற்கு கோவப்பட்டோமே என்று கூட தோன்றும். இப்பொழுது இனிக்கிறதா..?

இவ்வாறான விடயங்கள் நிகழாவிட்டால் வாழ்க்கையும் இனிக்காது. நினைப்பவை யாவும் உடனே நடந்து விட்டால் வாழ்க்கையில் எந்தவொரு சுவாரஷ்யமும் இருக்காது.

அதற்காக நடப்பவை நடக்கட்டும் என பேசாமல் இருந்து விடுவதும் புத்திசாலித்தனம் அல்ல.

முடிந்தவரை முயலுங்கள்... முடியாதவிடத்து கொஞ்சம் பின் வாங்குவதில் தவறில்லையே..

அதில் ஏதேனுமொரு நலவை நிச்சயம் படைத்தவன் ஏற்படுத்தியிருப்பான். உறுதியாய் நம்புவோம்...!! நம்பிக்கையே வாழ்க்கை...!!

# ஒன்றுக்கு ஒன்பது என்ன தெரியுமா...?



“பொறுமை என்றால் என்ன?” “அது என்ன விலை?” என்று கேட்கக் கூடிய காலத்தில் வாழ்கிறோம்.

ஆனால், இக்காலத்திலும் பொறுமையை பேணுதலாக பற்றிப் பிடித்துக் கொண்டிருப்போரும் இல்லாமலில்லை.

பொறுமை என்னும் ஆபரணத்தை ஒவ்வொருவரும் அணிந்து கொண்டால் உள்ளமும் உடலும் சீராகிவிடும்.

* கர்வம் குறையும் : பொறுமை காத்தலினால் கர்வம் என்பது இருந்த இடம் இல்லாமல் அழிந்துவிடும்.

* நல்லெண்ணம் அதிகரிக்கும் : ஒருவர் மீது தவறுதலாக தப்பபிப்பிராயம் கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் உடனே வார்த்தைகளை விடாது பொறுமையை கடைப்பிடித்தால் உண்மை வெளிப்படும் சந்தர்ப்பத்தில் நல்லெண்ணம் வெளிப்படும்.

* மன அழுத்தம் குறையும் : கொதித்தெழ வேண்டிய சந்தர்ப்பங்களில் கூட பொறுமை எமது மனதினை திடப்படுத்தி அழுத்தமான மன நிலையை மாற்றி மனதை சாந்தப்படுத்தி விடுகிறது.

* கோபம் இல்லாமலாகும் : சாந்தம் உயர்ந்து கோபம் தணியும். கோபம் உள்ளத்துக்கும் உடலுக்கும் கேடு விளைவிக்கும். பொறுமை கோபத்தை வெல்லும்.

* சகிப்புத் தன்மை கூடும்.

* நேர்சிந்தனை கூடும்.

* மனப் பக்குவம் அதிகரிக்கும்.

* மன நிம்மதி கிடைக்கும்.

* தாழ்வு மனப்பான்மை குறையும்.

பொறுமையைக் கடைப்பிடித்து நிம்மதியாய் வாழ்வோம்..!

வாழ்க்கையை அழகாக்குவோம்..!





அரபாத் பஹுர்தீன்

# 20 அணிகள் 55 போட்டிகள் 27 நாட்கள் 9 மைதானங்கள்

# ஒரே ஒரு சம்பியன்

# 9ஆவது ரி20 உலகக்கிண்ணம் இன்று கோலாகல ஆரம்பம்

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 9ஆவது ஆடவர் ரி20 உலகக்கிண்ணத் தொடர் இன்று அமெரிக்காவின் டெல்லஸ் மைதானத்தில் மிக்க கோலாகளமாக ஆரம்பிக்கின்றது. முதல் போட்டியில் அமெரிக்கா மற்றும் கனடா அணிகள் பலப்பரீட்சை நடாத்துகின்றன.

9ஆவது ஆடவர் ரி20 தொடர் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இன்று (2) ஆரம்பித்து எதிர்வரும் 29ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இத் தொடரில் கடந்த 8 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்காக அணிகள் இத் தொடரில் பங்கேற்கின்றன. இதற்கு முன்னர் இடம்பெற்ற ரி20 உலகக்கிண்ணத் தொடர்களில் அதிகபட்சமாக 16 அணிகளே பங்கேற்றிருந்தன. ஆனால் இம்முறை 20 அணிகள் இத் தொடரில் பங்கெடுக்கின்றன. குறிப்பாக போட்டிகளை நடாத்தும் அமெரிக்கா, உகண்டா, பபுவாநியூகினியா மற்றும் நேபாளம் ஆகிய 4 அணிகள் இம்முறை அறிமுக அணிகளாக உலகக்கிண்ணத் தொடரை அலங்கரிக்கவுள்ளதுடன் பல ஆச்சரியங்களையும் வழங்கும் என எதிர்பார்க்கலாம்.

9ஆவது ரி20 உலகக்கிண்ணத்தின் குழுநிலை ஆட்டங்கள்.

9ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடர் மீண்டும் பழைய வழிமுறையைப் பின்பற்றி நடக்கிறது. அதன்படி மூன்று சுற்றுகளாக இடம்பெறவுள்ள இத் தொடரில் குழு நிலை லீக் ஆட்டம், சூப்பர் 8 லீக் ஆட்டம் மற்றும் விலகல் முறை அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி என 4 சுற்றுகளாக இடம்பெறவுள்ளன. மேலும் தொடரில் பங்கேற்றுள்ள 20 அணிகளும் ஒரு குழுவில் 5 அணிகள் வீதம் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அந்த 5 அணிகளும் தமது குழுவிலுள்ள மற்றைய அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். பின்னர் முதல் சுற்று குழுநிலை போட்டியில் ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் 2ஆம் சுற்றான சுப்பர் 8 லீக் சுற்றுக்குத் தகுதி பெறும்.

**குழு விபரம்**

குழு - ஏ:
கனடா, இந்தியா, அயர்லாந்து, பாகிஸ்தான், அமெரிக்கா

குழு - பி:
அஸ்திரேலியா, இங்கிலாந்து, நமீபியா, ஓமன், ஸ்காட்லாந்து

குழு - சி:
ஆப்கானிஸ்தான், நியூசிலாந்து, பப்புவா நியூ கினி, உகண்டா, மேற்கிந்திய தீவுகள்

குழு - டி:
பங்களாதேஷ், நேபாளம், நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை

போட்டி இடம்பெறவுள்ள மைதானங்கள்

ஆடவர் ரி20 உலகக்கிண்ணத் தொடரின் முதல் சுற்று குழுநிலை லீக் ஆட்டங்கள் இன்று (2) ஆரம்பித்து எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. பின்னர் 2ஆம் சுற்றான சுப்பர் 8 லீக் போட்டிகள் எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து 3ஆம் சுற்றான விலகல் முறை அரையிறுதி ஆட்டம் 27ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன், தீர்மானமிக்க இறுதிப் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் இப் போட்டித் தொடர் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெறுவதால் சில போட்டிகள் இலங்கை நேரப்படி இரவு 8 மணிக்கும் , சில போட்டிகள் இரவு 11 மணிக்கும் சில போட்டிகள் அதிகாலை 4.30 மணிக்கும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த 9ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடரில் மொத்தமாக 55 போட்டிகள் இடம்பெறவுள்ளன. இவைகளில் மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள 6 மைதானங்களிலும், அமெரிக்காவில் உள்ள 3 மைதானங்களிலும் போட்டிகள் நடைபெறுகிறது. இதில் இலங்கை அணி தமது முதல் சுற்று குழுநிலை லீக் ஆட்டத்தின் 4 போட்டிகளையும் அமெரிக்காவில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தமது முதல் போட்டியை எதிர்வரும் 03ஆம் திகதி தென்னாபிரிக்க அணிக்கு எதிரான நியூயோர்க்கில் உள்ள நசாவு மைதானத்தல் விளையாடவுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

குறிப்பாக இலங்கை அணி விளையாடும் நியூயார்க்கில் உள்ள லாங் தீவின் நசாவு கவுண்டி மைதானம் அமைந்துள்ளது. இது ரி20 போட்டிக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது. இந்த மைதானத்தில் தற்காலிக இருக்கை வசதியும் அஸ்திரேலியாவில் இருந்து ஆடுகளமும் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் கிரிக்கெட் ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்துள்ள இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகள் எதிர்வரும் 9ஆம் திகதி மோதும் லீக் போட்டியும் இம் மைதானத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ் உலகக்கிண்ணத் தொடரின் தீர்க்கமான அரையிறுதிப் போட்டிகளில் முதல் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள டிரினிடாட்டி நகரிலுள்ள பிரையன் லாரா மைதானத்தில் இடம்பெறவுள்ளதுடன், 2ஆவது அரையிறுதிப் போட்டி கயானா நகரிலுள்ள பிராவிடன்ஸ் மைதானத்திலும் நடைபெறவுள்ளது. மேலும், தீர்மானமிக்க இறுதிப் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள பார்படாஸ் நகரின் பிரிட்ஜ் டவுனில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறுகிறது.

உலகக் கிண்ணப்போட்டிகள் நடக்கும் மைதானங்களின் பெயர்கள்

மேற்கிந்தியத் தீவுகளின் மைதானங்கள்.

- சேர் விவியன் ரிச்சர்ட்ஸ் மைதானம்.
- கென்சிங்டன் ஓவல் மைதானம்.
- பிராவிடன்ஸ் மைதானம்.
- டேரன் சமி மைதானம்.
- அர்னோஸ் வேல் மைதானம்.
- பிரையன் லாரா மைதானம்

அமெரிக்காவிலுள்ள மைதானங்கள்.

- லாடர்ஹில் சென்ட்ரல் ப்ரோவர்ட் பூங்கா மைதானம்.
- கிராண்ட் ப்ரேரி மைதானம்.
- நசாவு கவுண்டி சர்வதேச மைதானம்

9ஆவது ரி20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான விதிகள்

- முதல்முறையாக சர்வதேச ரி20 போட்டியில் ஸ்டப் வோர்ச் முறை பயன்படுத்தப்பட உள்ளது. பந்துவீசும் அணி முந்தைய ஓவர் முடிந்த 60 விநாடிகளுக்குள் அடுத்த ஓவரை வீசத் தயாராக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு போட்டியும் 3 மணித்தியாலங்கள் மற்றும் 10 நிமிடங்களுக்குள் முழுமையாக முடிக்கப்பட வேண்டும். (ஒவ்வொரு இன்னிங்ஸிற்கும் ஒரு மணித்தியலம் மற்றும் 25 நிமிடங்கள் ஒதுக்கப்படும் மற்றும் 20 நிமிட இடைவெளி வழங்கப்படும்).
- வெவ்வேறு களத்தடுப்பு கட்டுப்பாடுகளுடன் இன்னிங்ஸின் முதல் ஆறு ஓவர்களுக்கு பவர் பிளே இருக்கும். ஒவ்வொரு அணிக்கும் இரண்டு ரிவிவ் (மேன்முறையீடு) வழங்கப்படும்.
- ஆட்டம் சமநிலை பெறும் பட்சத்தில் சூப்பர் ஓவர் மூலம் வெற்றி முடிவைத் தீர்மானிக்கும். அதாவது ஒவ்வொரு அணியும் ஆறு பந்துகளை எதிர்கொள்ளும். சூப்பர் ஓவரும் சமநிலை பெற்றாலும் வெற்றி பெறும் அணியை தீர்மானிக்கும் வரை சுப்பர் ஓவர் முறை தொடரும்.
- போட்டிக்கு நடுவில் மழை பெய்து இடையூறு ஏற்பட்டால் டக்வேர்த் லூயிஸ் முறையானது முடிவுகளைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும்.
- அத்துடன் இத் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டிக்கு ரிசர்வ் டே வழங்கப்பட்டுள்ளதுடன் இறுதிப் போட்டிக்கும் ரிசர்வ் டே வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், இரண்டாவது அரையிறுதி போட்டியை முடிக்க கூடுதலாக 250 நிமிடங்கள் மட்டுமே வழங்கப்படுள்ளது.

ரி20 உலகக்கிண்ணத்தின் சாதனைப் பட்டியல்

- ரி20 உலகக்கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் பெற்ற வீரர் : விராட் கோஹ்லி (இந்தியா) 27 போட்டிகளில் 1141 ஓட்டங்கள்.
- உலகக்கிண்ணத்தின் ஒரு தொடரில் அதிக ஓட்டங்கள்: விராட் கோஹ்லி (இந்தியா) 2014இல் 319 ஓட்டங்களை விளாசினார்.
- உலகக்கிண்ணத் தொடரில் அதிகபட்ச தனிநபர் ஓட்டங்கள் : 2012இல் பங்களாதேஷிற்கு எதிரான போட்டியில் நியூசிலாந்து வீரர் பிரண்டன் மெக்கல்லம் 123 ஓட்டங்கள் குவித்தார்.
- உலக்கிண்ண வரலாற்றில் அதிக சதங்கள்: கிறிஸ் கெய்ல் (மேற்கிந்தியத்தீவுகள்) 2007 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் இரண்டு சதங்கள் அடித்தார்
- உலகக்கிண்ணத் தொடரில் அதிக விக்கெட்டுகள்: ஷகிப் அல் ஹசன் (பங்களாதேஷ்) 36 போட்டிகளில் 47 விக்கெட்டுகள்.
- உலகக்கிண்ணத்தில் ஒரு தொடரில் அதிக விக்கெட்டுகள்: வனிந்து ஹசரங்க (இலங்கை) 2021இல் 16 விக்கெட்டுகளை அள்ளிச் சுருட்டினார்.
- உலகக்கிண்ணத்தின் சிறந்த பந்துவீச்சுப் பிரதி: அஜந்தா மெண்டிஸ் (இலங்கை) 2012இல் சிம்பாப்வேக்கு எதிராக 8 ஊட்டங்களுக்கு 6 விக்கெட்டுகள்.
- உலகக்கிண்ணத் தொரில் அதிக ஆட்டமிழப்புக்களைச் செய்த விக்கெட்காப்பாளர்: எம்.எஸ். தோனி (இந்தியா) - 33 போட்டிகளில் 32 விக்கெட்டுகள்.
- உலகக்கிண்ணத் தொடரில் அதிக பிடியெடுப்புக்களைச் செய்தவர்: ஏ.பி.டி. வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) - 30 போட்டிகளில் 23 பிடியெடுப்புக்கள்.
- உலகக்கிண்ணத் தொடரில் ஒரு அணியால் பெறப்பட்ட அதிகபட்ச ஓட்டங்கள்: இலங்கை அணி கென்யா அணிக்கு எதிரான 2007இல் 260 ஓட்டங்களை விளாசியது 6 விக்கெட்டுக்களை இழந்து.
- உலகக்கிண்ணத் தொடரில் ஒரு அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்கள் : நெதர்லாந்து அணி இலங்கை அணிக்கு எதிராக 2014இல் 39 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



**10ஆவது ரி20 உலகக்கிண்ணம் இடம்பெறப்போகும் நாடு எது?**

கொவிட் கால இடைவெளியைத் தவிர்த்து ஆடவர் ரி20 உலகக்கிண்ணத் தொடர் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.அதற்கமைய எதிர்வரும் 2026ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள 10ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடரை இந்திய மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் இணைந்து நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் 11ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் இம்பெறவுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

மகளிர் ரி20 உலகக்கிண்ணத் தொடர்

கடந்த 2016 இல் ஆடவர் மற்றும் மகளிர் ஆகிய இரண்டு உலகக்கிண்ணத் தொடர்களும் ஒரே நேரத்தில் விளையாடப்பட்டன. ஆனால் இந்த ஆண்டு மகளிர் ரி20 உலகக் கிண்ணத் தொடர் தனிப் போட்டியாக நடைபெறவுள்ளது. இது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ளதுடன் இலங்கை மகளிர் அணி இத் தொடருக்கான தகுதிகான் போட்டியில் வெற்றி பெற்று தங்கள் மகளிர் உலகக்கிண்ணத் தொடருக்கான வரவை உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.